KALANILAYAM

தனிப்பிரதி விலை 0-2-6 அணா

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ௵ மே ௴ 23 ௳ [No. 21

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 321
2. கம்பராமாயணம் (கிட்கிந்தைப் படலம்) T. N. சேஷாசலம் B.A., B. L. 322
3. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 7-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 325
4. உதயண சரிதம். S. சோமசுந்தர தேசிகர் 326
5. சூரியன் (நிருதி, வருணன், குபேரன்) E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A.,L.T., 329
6. ஒத்தெல்லோ (அங்கம் 2. களம் 3.) Shakespeare's "Othello" 331
7. கலித்தொகை (மருதக்கலி 1. 2.) T. A. கனகசபாபதி முதலியார் 333
8. பழமுதிர்சோலை. (நல்லார்கட் பட்ட திரு) "சபரி" 335
9. வர்த்தமானம் 336

கலாநிலயம்

வித்தகமும் வித்தைகளும்.

"பறவைகளைப் போல் காற்றில் பறக்கக் கற்றுத் தருகின்றனர், மீன்களைப்போல் கடலில் நீந்தக் கற்றுத்தருகின்றனர், மற்று,பூமியின்மேல்எங்ஙனம் வாழ்வதென்பதையோ அறிகின்றோமில்லை" என்று ஏங்கி நகைகின்றார் ஒரு வித்தகர். இத்தகைய ஏக்கம் இக்காலத்துநிலைமைக்குச் சாலப் பொருத்தம் வாய்ந்தது. பூமியின்மேல் வாழ்வதன் மேன்மை யாவற்றினும் சிறந்ததாதலின் அதனை நினைவுசெய்துதரும் தூய்மை மிக வாய்ந்தது இவ்வாசகம். பூமியின்மேல் வாழத் தெரிந்தவர்களுக்கு மற்றைய இரண்டும் அவசியம் இல்லாமற் போய்விடும்; பூமியின்மேல் வாழத் தெரியாதவர்களுக்கு மற்றைய இரண்டும் ஆபத்தாய் முடியும். நிலத்தில் நலமுறவாழ்வது வித்தகம்; காற்றினுங் கடலினும் ஊர்வதனைய பூதசாத்திறத்திறமைகளனைத்தும் வித்தைகள். இவ் வித்தைகளைக் கண்டு ஏமாந்து நிற்பது இக்கால இயல்பு; அதுவே வித்தகம் என்று மயங்குவது இக்காலப் பிழை; அதுவே வாழ்க்கையென ஆரவாரஞ் செய்தல் இக்காலத்தின் பரிபவம்; அதனுள் மூழ்கிச் சாவது இக்காலத்தவர் தலையில் இறங்கியுள்ள சாபம். வாழ்க்கையின் வித்தகம் வேறும் என்பதைத் துணிந்தாலன்றி இப்பரிபவம் நீங்கி நாம் சாபம் தீரமாட்டோம். இவ்விடயங்களை யாம் பன்முறை பலவகைகளில் இக்கலாநிலயத்தின் இதழ்களில் ஆராய்ந்து காட்டியிருக்கின்றோம். அதனோடு, 'திராக்ஷைப்பழம் புளிக்கும்' என்ற பான்மையில் இவை வரையப்பெறுகின்றனவோ என்று அயிர்க்காவண்ணம், பூதசாத்திர வளர்ச்சியில் கைவந்த மேனாட்டுச் சிந்தனையாளர் இயம்பியவற்றையும் எடுத்துக் காட்டுதல் நலம். அன்னவர்களிடையே, பூதசாத்திரத் தேர்ச்சியாலும், தத்துவத்துறை ஆராய்ச்சியாலும், வாழ்க்கைஇக்காலம் செல்லும் வகைகளையெல்லாம் நுனித்துணர்ந்த நல் அறிவாலும், சிறந்து விளங்குகின்ற ஜோட் (C. E. M. Joad) என்பவர் வரைந்துள சிலவாசகங்களை இதன் கீழ்த் தருகின்றோம். பன்முறை அதனைப் படித்துப் படித்து மனத்துள் நிறுவிக்கொள்ளல் சாலப் பயன் தரும்.–

The reasonableness of a civilization is chiefly shown by the ends which its members set themselves; the unreasonableness of ours by the fact that, having achieved an unprecedented ability to realize our ends, we propose to ourselves those which are foolish, trivial and vulgar, and fail to give us satisfaction. Nothing in modern civilization is more remarkable than the disparity between our mechanical skill and our social wisdom, between our power over nature and the mentality which dictates its employment. Science has won for us powers fit for the gods, and we bring to their use the outlook of schoolboys. In knowledge of what constitutes the good life of the individual

and of how men should live together in society, our civilisation, is in no way superior—in some ways it is inferior—to that of the ancient Greeks, in scientific attainment and the ability to exploit the powers of nature in our service we have immeasurably outstripped them. See that mechanic by the roadside mending the carbarettor of his car! In his display of scientific knowledge and skill in its application he is behaving rather like a superman. Sse the same mechanic twenty minutes later, driving in a little hell of noise and dust and stench, unable to appreciate the country himself and precluding the appreciation of all who come near him! He is behaving like a congeniatal idiot! compare the almost miraculous physical process which are involved in the production of a modern 'talkie' with the imbecilities it talks, wlth the banalities which wireless is used to transmit. It is a sobering reflection that Clerk Maxwell should have lived in order that the remoter ether might vibrate to the strains of negroid music.

The disparity is most marked where the gifts of science have been most abundant. "We have the best radios and the dullest radio programmes in civilization; the best automobiles and the fewest parking places; the higest paid actresses and the stupidest moving pictures'; so an American, in illustrative comment on the theme of this chapter. To the march of science there is no limit; we can talk across continents and oceans, telegraph pictures, install television sets in the home, listen to Big Ben striking in Ceylon, ride above and beneath the earth and the sea. Mechanics and washer-women own their private cars, children talk along wires, typewriters are silent, teeth-filling painless, liners have swimming baths, crops are ripened by electricity, roads are made of rubber, X-rays are the windows, though which we behold our insides, photographs speak and sing, murderers are tracked down by wireless, hair is waved by electric currents, submarines go to the North and aeroplanes to the South Pole............ Yet we cannot, to take a simple example, in the midst of our enormous cities provide a little space where poor people may play in comfort and saftey.

ஆங்கிலம் அறிந்திராதார்க்கு உதவியாம்படி மேற்கண்ட வாக்கியங்களின் பிண்டப்பொருளை இதன்பின் தமிழில் வரையலாகின்றோம்:—

"ஒரு நாகரிகம் நியாயமும் நியதியுமுடையதாம் என்பதை அச்சனங்கள் தாம் சாதித்தல் வேண்டும் என்று மேற்கொண்டிருப்பவைகளிற் காணல்வேண்டும். நாமோ (மேனாட்டோர்) சாதிக்க நினைப்பதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அளவற்ற திறமைகளை அடைந்தவர்களாயிருந்தும், முழுமூடமான அற்ப ஆபாசங்களையே சாதிக்கும் சங்கற்பமுடையவர்களாக இருத்தலின் நமது நாகரிகம் நியாமும் நியதியுமற்றுக் கிடக்கின்றதென்பது வெளிப்படை. இவைகளில் யாதொன்றும் நமக்குத் திருப்தியளிப்பதில்லையே. நாம் அடைந்திருக்கின்ற எந்திரத்திறமையோ மிகப்பெரியது; மற்று, அத்திறமையைப் பயன்படுத்திக்கொள்வதற்கு இல் றியமையாததாகிய வாழ்க்கை வித்தகமோ மிகச்சிறியது. கடவுளர்களே கையாள்வதற்குத் தகுதியான சக்திகளைப் பூதசாத்திரங்கள் நமக்குச் சம்பாதித்துக் கொடுத்திருந்தபோதிலும், அவைகளை உபயோகப்படுத்துதற்குப் பள்ளிக்கூடப்பிள்ளைகளின் புத்தியையே கையாள்கின்றோம். நல்லவாழ்க்கை எதுதான் என்னும் அறிவிலும், மனிதர் தனித்தனியும் ஒன்றுகூடியும் எங்ஙனம் வாழ்தல் வேண்டும் என்னும் நினைவிலும், நாம் நமது முன்னோர்களைக்காட்டிலும் பலவகைகளில் தாழ்ந்த நிலையிலிருக்கின்றோம். நமக்கு வாய்த்திருக்கின்ற எந்திரச் சக்திகளை உபயோகப்படுத்துவதைக் காணுங்கால் பிறவிமுண்டங்கள் நாம் என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை. பேசும் படங்கள் (Talkie) மிகவும் ஆச்சரியமானவை; மற்று, அவை பேசும் ஆபாசங்களைக் கேளுங்கள். கம்பியில்லாத் தந்திகள் மிகவும் ஆச்சரியமானவை; மற்று அவை பரப்பும் நாசங்களைப் பாருங்கள். பூத சாஸ்திரத்தின் போக்கிற்கு எல்லையில்லை; தேசம் தேசமாய் நின்ற இடத்திலிருந்தே பேசலாம், படங்களை கம்பியில்லாத் தந்திகள் வழியாக அனுப்பலாம், லண்டனிலுள்ள கடியாரம் இலங்கையில் அடிக்கக் கேட்கலாம். கடலின் கீழும் மேகத்தின் மேலும் ஊரலாம். தொழிலாளிகளும் வண்ணாத்திகளும் சொந்தமாக மோட்டார்கார் வைத்திருக்கின்றனர். மின்சாரத்தின் உதவியால் பயிர்கள் வளர்கின்றன......ஆயினும் இவ்வளவு பெரிய பட்டினங்களில் ஏழைகள் சுகமாக விளையாடுவதற்குஒரு இடம் கிடைக்காமற் போகின்றதென்றால் வேறு ஒன்று சொல்வானேன்"

மேனாட்டுச் சிந்தனையாளர் எத்தனையோ பலர் மீண்டும் மீண்டும் இன்னவாறே, அந்நாகரிகம் சாதித்திருப்பவைகளைச் சோதித்துரைக்கும் இவையனைய வாசகங்களை, இங்கிருந்து அங்கிருப்பவர்களை நோக்கி நோக்கி அங்காந்திருப்பவரனைவரும் ஒருபோதும் மறவாமல் நினைவின்கண் நிறுத்தி வைத்திருத்தல், நல்வாழ்க்கையென்பது வேறொன்று உளது என்னும் எண்ணமேனும் எழுவதற்கு மிகவும் உதவியாயிருக்கும். இவ்வாசிரியர் ஜோட், எந்திரத்திறமைகள் வாழ்க்கை நலன்களைப் பெருக்கவல்லன வென்றும், ஆயினும், நல்வாழ்க்கை இன்னதென்று நாம் அறிந்துகொள்ளவில்லையாகையால் அவை அற்பமான ஆபாசங்களுக்கே ஆதாரமாகின்றன வென்றும் கருதலாகின்றார். அந்தரம் நோக்கினால் இதன் உண்மையோ சிறிது வேறாகத்தோன்றும். நல்வாழ்க்கை என்பது இன்னதென்னுமறிவும், அவ்வறிவின்படி நடக்கத்தக்க பயிற்சியுங் கைவருமானால், பிறகு இந்தப் பூதசாத்திர ஆராய்ச்சிகளும் அதன் பயனாக விளைகின்ற எந்திரத்திறமைகளும் மனிதருக்கு அடியுடன் அனாவசியங்களே என்று நம் இந்தியநாட்டு வித்தக முன்னையோர் மதித்திருந்தனர் என்று எண்ணுதற்கு ஆதாரங்கள் காணல் அருமையன்று. இவை அனாவசியமாவதுடன்

ஆபத்தாகவும் முடியலாம் என அஞ்சினர் என்று கொண்டாலும் பிழையாகாது. "ஆப்பைதனை அசைப்பானேன்" என்று அன்னவர் கேட்கின்ற குரலின் எதிரொலி அவர்தம் நூல்களினின்று நம் செவிகளை எட்டுகின்றன. விளையாட்டுக் கருவிகளாகக் கொள்ள மாட்டாமல் இவ்வெந்திரங்கள் மிக ஆபத்துடையனவாக இருக்கின்றன; வித்தகத்திற்கோ இவை கருவிகள் ஆகமாட்டா. எனின், வித்தகத்திற்கு விரோதமாகவும் விளையாட்டிற்கு ஆபத்தாகவும் இருக்கின்ற இவைகளை வியப்பது ஒழிந்தால் பின்னர் வேறு ஒன்றில் நமது நினைவும் முயற்சியும் செல்வதற்கு இடம் உண்டாகலாம் என்பதை எண்ணியே இக்கலாநிலயம் அப்போதைக்கப்போது இத்தகைய உரைகளை எடுத்தெழுதி வரலாகின்றது. இத்திறமைகள் ஆசைப்படுவதற்குஉரியனவல்ல; அகற்றவேண்டும் என்று முயல்வதற்குமுரியன வல்லவென்றுங் கருதுகின்றோம். இப்பூதசாத்திர ஆராய்ச்சியும் எந்திரத் திறமையும் தீமையெனக் கருதுவோரும் அவைகளை அடக்கவும் விலக்கவும் தலைப்படவேண்டா. அவை ஆமாறு ஆகட்டும். அயலயல் நல்வாழ்க்கைக் குரிய சாதனங்களை நன்கறிந்து அவை எல்லாருக்கும் எட்டவல்ல உதவியைப் புரிந்துவந்தால் அதுவொன்றே அந்தத்தில் தனக்குரிய அரசினைத் தானே எய்திவிடும். இக்காலம் தீமையை ஒழிப்பதற்குச் செய்யும் முயற்சிகளில் பத்திலொரு பங்கு நன்மையை நாட்டுதற்குச் செய்யப்பட்டிருக்குமானால் எவ்வளவோ உலகம் பயன்பெற்றிருக்குமே.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தா காண்டம்—10. கிட்கிந்தைப் படலம்

[312-வது பக்கத் தொடர்ச்சி]

சீற்றம் விட்ட நற்றகைச் செம்மல்

தீயினை செய்பினும் அவிப்பதென்ன, மயக்கின்மேல் மயக்கு வைத்துத் தன்னுளத்திருந்த துயரினை மதுவினால் மாற்றமுயன்றதன் மதியின்மையை அறிந்து நிறைந்தசீர்த்தியானாகிய அச்சுக்கிரீவன், இலக்குவனை அழைத்துவருமாறங்கதனையனுப்பித் தான், நெடிய கடைவாயிற்றலை, தன்துணைத்தேவிமாருந் தமரொடுந் தழுவ, இலக்குமணனது வருகையை யெதிர்நோக்கி நின்றனன். அப்பொழுது,

உரைத்தசெஞ் சாந்தும் பூவும்
சுண்ணமும் புகையு மூழின்
நிரைத்தபொற் குடமுந் தீப
சாலமு நிகழ்ந்த முத்து
குரைத்தெழு விதானத் தோடு
தொங்கலுங் கொடியுஞ் சங்கு
மிரைத்துமிழ் முரசு முற்று
மியங்கின வீதி யெல்லாம்

[அரைத்த சிவந்த சந்தனக்குழம்பும், மலர்களும், வாசனைப் பொடிகளும், வாசனைப்புகையும், விதிப்படி வரிசையாக வைக்கப்பட்ட பொற்குடங்களும், விளக்கு வரிசைகளும், தொங்குகின்ற முத்து வடங்களும் அசைந்து எழுகின்ற மேற்கட்டுக்களும், பீலிக்குஞ்சங்களும்கொடிகளும், சங்குகளும், இரைந்து ஒலிக்கின்ற முரசங்களும், ஆகிய இவைகளெல்லாம், வீதிமுழுவதும் நிறைந்தன.]

இன்னதோர் வீதியின்வாய் இளையவள்ளல் எய்தி வருங்கால்,

தூயதிண் பளிங்கிற் செய்த
சுவர்களின் றலத்திற் சுற்றி
நாயக மணியிற் செய்த
நனிநெடுந் தூணி னுப்பண்
சாயைபுக் குறலாற் கண்டோ
ரயர்வுறக் கைவி லோடு
மாயிர மைந்தர் வந்தா
ருளரெனப் பொலிந்த தவ்வூர்

[அக் கிஷ்கிந்தாநகரமானது, தூய்மையானவலிய ஸ்படிகத்தினால் கட்டிய சுவர்களிலும், சுற்றிலும் சிறந்த இரத்தினங்களினால் அமைத்த மிக்க நீண்ட தூண்களின் நடுவிடங்களிலும், இலக்குமணனது சாயை புகுந்து பொருந்துவதால், கையில் ஏந்திய வில்லுடன் ஆயிரம் வீரர்கள் அங்குவந் திருக்கின்றார்களென்று, பார்த்தவர் சந்தேகிக்கும்படி பொலிந்து விளங்கிற்று.]

ஆயிரம் வீரா வந்தன ரென்னத் தூணினும் சுவரினும் தன் சாயையாடப் போந்த இலக்குவனை எதிர்கொள்ளுமாறு,

சுண்ணமுந் தூசும் வீசிச்
சூடகத் தொடிக்கை மாதர்
மண்ணகன் கவரிக் கற்றைக்
காலுறக் கலைவெண் டிங்கள்
விண்ணுற வளர்ந்த தென்ன
வெண்குடை விளங்க வீர
வண்ணவிற் கரத்தான் முன்னர்க்
கவிக்குலத் தரசன் வந்தான்

[சூடகமும் தொடியும் அணிந்த கைகளையுடைய மாதர், வாசனைப்பொடியையும் துணியும் வீசிக்கொண்டு, பெரிய சாமரைக் கற்றைகளைக் காற்றுண்டாகும்படி அசைத்து, கலைகள் நிரம்பிய வெண்மையான சந்திரன் ஆகாயத்தில் வளர்ந்த தென்னும்படி வெண்கொற்றக்குடை விளங்க, வீரம்வாய்ந்த அழகிய வில்லை யேந்திய கைகளையுடைய இலக்குவனுக்கு முன், வானரசாதித் தலைவனாகிய சுக்கிரீவன் வந்தான்.]

அந்தக்காலை,

வெம்முலை மகளிர் வெள்ள
மீனென விளங்க விண்ணிற்
சும்மைவான் மதியங் குன்றிற்
றோன்றிய தெனவுந் தோன்றிச்
செம்மலை யெதிர்கோ ளெண்ணித்
திருவொடு மலர்ந்த செல்வன்
அம்மலை யுதையஞ் செய்த
தாதையு மனைய னானான்.

[பெருமகனான இலக்குவனை யெதிர்கொள்ள எண்ணிய, அழகொடுவிளங்குகின்ற செல்வனான சுக்கிரீவன், விரும்புதற்குரியமுலைகளையுடைய மகளிர்கூட்டம் நக்ஷத்திரங்கள்போல் பிரகாசிக்க, அவர்களினிடையே, மலையில்உதித்து ஆகாயத்தில் எழுகின்ற கலைகள் நிரம்பிய சந்திரன்போல் தோன்றி, அந்தமலையில் உதித்த தன் தந்தையாகிய சூரியனையும் போன்றவனானான்.]

மதியமென்ன முன்வந்த சுக்கிரீவன் பரிதியெனத்

தோன்றும்படி மாறியது, ஒருகால், இலக்குவனைக் கண்ணுற்றவளவில், பிழையுடையவன் தானெனும் நாணத்தால் முகஞ் சிவந்த காரணத்தாற் போலும். அரிக்குலத் தரசிற்கு அளப்பரும் நாணம் மீதூர்ந்ததென்னின், அவ்வாறு,

தோற்றிய வரிக்குலத் தரசைத் தோன்றலு
மேற்றெதிர் நோக்கின னெழுந்த தவ்வழி
சீற்றமங் கதுதனைத் தெளிந்த சிந்தையா
லாற்றினன் றருமத்தி னமைதி யுன்னுவான்

[தோன்றிய சுக்கிரீவனை, இலக்குமணனும், வரவேற்று எதிர் நோக்கினன். அப்பொழுது இலக்குவனுக்குக் கோபம் எழுந்தது. ஆயினும், தருமத்தின் அமைதியை எண்ணித் தெளிவடைந்தமனத்தினால் அப்பொழுது அக்கோபத்தை ஆற்றிக்கொண்டான்.]

சீற்றஞ் சிறக்க எத்தனை காரணங்கள் ஏற்பட்டனவெனினும், ஆறி நிற்பதே அறனென்ற அமைதியை இளையவள்ளல் உன்னிவனாக,

எழுவினு மலையினு மெழுந்த தோள்களால்
தழுவின ரிருவருந் தழுவித் தையலார்
குழுவொடும் வீரர்தங் குழாத்தி னோடும்புக்
கொழிவிலாப் பொற்குழாத் துறையு ளெய்தினர்.

[அவ்விருவரும், தூணினும் மலையினும் பருத்ததம்தோள்களால் ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டனர்; அங்ஙனந் தழுவி, மகளிர் கூட்டத்துடனும், குறையாத பொன்திரளினால் அமைந்த மாளிகையினுள் சென்றார்.]

அங்கு,

அரியணை யமைந்தது காட்டி யையவீண்
டிருவெனக் கவிக்குலத் தரச னேவலுந்
திருமக டலைமகன் புல்லிற் சேரவெற்
குரியதோ வீதென மனத்தி னுன்னுவான்

[வானரவேந்தனாகிய சுக்கிரீவன், அங்குஅமைக்கப்பட்டிருந்த சிம்மாதனத்தைக் காட்டி, “ஐயனே, இதில் அமர்வாயாக’ என்றுவேண்டிக்கொள்ளவும் இலக்குமணன்,“இலக்குமிக்கு நாயகனாகிய ராமபிரான் புல்தரையில் கிடக்க இச்சிம்மாதனம் எனக்குத் தகுதியாமோ’ என்று எண்ணினவனாகி]

கல்லனை மனத்தினை யுடைக்கை கேசியால்
எல்லணை மணிமுடி துறந்த வெம்பிரான்
புல்லணை வைகயான் பொன்செய் பூத்தொடர்
மெல்லணை வைகலும் வேண்டுமோ வென்றான்

[“கற்பாறைபோல் உறைந்திருக்கிற மனத்தையுடைய கைகேசியினால், ஒளி பொருந்திய கிரீடத்தைத் துறந்து வனத்திற்கு வந்த எம் தலைவனான இராமபிரான்,புல்படுக்கையில் கிடக்க,நான், பொன்னாற் செய்ததும் மலர்களாலலங்கரித்ததுமான மென்மையாகிய ஆதனத்தில் அமர்தலும் வேண்டுமோ” என்றான்.]

இவ்வுரையைக் கேட்டவளவில் அங்கிருந்தோர் அனைவரும் அழுதகண்ணின ராகி,ஒன்றும் உரைக்கமாட்டாமல், இந்திரயம் அவித்தவ ரென்ன இருந்தனர். அதன்மேல்,

மஞ்சன விதிமுறை மரபி னாடினை
எஞ்சலி லின்னமு தருந்தின் யாமெலா
முயஞ்சன மினியென வரசு ரைத்தலு
மஞ்சன வண்ணனுக் கனுசன் கூறுவான்

[சுக்கிரீவன் இலக்குவனை நோக்கி, “விதிப்படி முறையாக நீ நீராடி, குறைவில்லாத இனிய உணவை உண்டாயானால், நாங்களெல்லாம் இனி உய்ந்தவர்கள் ஆவோம்” என்று சொல்லுதலும், மைபோன்ற நிறமுடைய இராமனுக்குத் தம்பியாகிய இலக்குவன் பின்வருமாறு கூறுவான்.]

வருத்தமும் பழியுமே வயிறு மீக்கொள
இருத்துமென் றாலெமக் கினியதி யாவதோர்
அருத்தியுண் டாயினு மவலந் தான்தழீஇக்
கருத்துவே றுற்றபி னமிழ்துங் கைக்குமால்

[துன்பமும் பழியுமே வயிற்றை நிரப்ப நாங்கள் இருக்கின்றோமென்றால், எமக்கு இனியதாகக் கூடியது எது தான்?உண்ண வேண்டுமென்ற ஒரு ஆசை உண்டானபோதிலும், துன்பமடைந்து மனம் வேறுபட்டபோது,அமிர்தமாயினும் கசக்கு மன்றோ]

மூட்டிய பழியெனு முருங்கு தீயவித்
தாட்டினை கங்கைநீ ரரசன் றேவியைக்
காட்டினை யெனினெமைக் கடலி னாரமிழ்
தூட்டினை யாற்பிறி துயவு மில்லையால்

[இராமபிரானது தேவியைத்தேடி இருக்குமிடம் காட்டினாயென்றால், அவளைப் பறிகொடுத்தோம் என்று மூண்டிருக்கின்ற எரியும் நெருப்பை அவித்து எம்மைக்கங்கை நீரினால் ஆட்டினவனாவாய்; அன்றியும், கடலின் உண்டாகிய அருமையான அமிர்தத்தை உண்பித்தவனுமாவாய்; எமக்குப் பின் வேறு எவ்வருத்தமும் இல்லாததாகிவிடும்]

பச்சிலை கிழங்குகாய் பரம னுங்கிய
மிச்சிலை நுகர்வது வேறு நானென்று
நச்சிலே னச்சினே னாயி னாயுண்ட
எச்சிலே வதுவிதற் கைய மில்லையே

[பச்சிலை காய்கிழங்குகள் இராமன் புசித்துமிகுந்தவைகளையே நான்உண்பது அன்றி வேறுஒன்றும்விரும்பேன். அப்படி விரும்பினேனாயின் நாய் உண்ட எச்சிலை உண்பதற்கே நிகராகும். இதற்குச் சந்தேகம் இல்லை.]

அன்றியு மொன்றுள தைய யானினிச்
சென்றனன் கொணர்ந்தடை திருத்தி னாலது
நன்றுணைக் கோமக னுகர்வ தாதலான்
இன்றிறை தாழ்த்தலு மினிதன் றாமென்றான்

[ஐய, இவைகளல்லாமலும் இன்னு மொன்று உளது. இனி நான்போய்க் கீரை முதலியவைகள் கொணர்ந்து சமைத்துவைத்தால், அதனைத்தான் உன் துணைவனாகிய இராமன் உண்பதாகும். ஆதலால் இப்பொழுது இங்கு நான் சிறிதுநேரங்கூடக் காலதாமதம் செய்வது நல்லது ஆகாது, என்றான்]

இராமனது துன்பத்தினோடு தானுந் துன்புற்றழிகின்ற இந்தத் தம்பியின் அருங்குணம் உன்னுவோர் உள்ளத்தைமிகஉருக்கவல்லது. இலக்குமணனுக்கும் சுக்கிரீவனுக்கும் இடையேநிகழ்ந்த இவ்வுரைகளில் ஒன்று கருதுதற்குளது. தாரை அங்கதன் அனுமன் முதலாயினோர்பால் சுக்கிரீவனை வெகுண்டு உரைத்த மாற்றம் ஒன்றும் அவனை நேரே கண்டவுடன் இலக்குமணன் வாய்நின்று வந்ததில்லை. தனது அண்ணன்பால் பரிவுமிக்க மொழிகளே அனைத்தும் பேசினான். சுக்கிரீவன் தன்னெதிரே தோன்றியவுடன் இலக்குவன் தன்னகத்து எழுந்த சீற்றத்தைத் தெளிந்த சிந்தையால் தருமத்தின் அமைதியை யுன்னி ஆற்றிக்கொண்டனன் என்று கம்பர் துவக்கத்திலே சொல்லிவைத்தார். எனின், வான்மீகத்தினுள் நிகழ்ந்ததுபோல், இலக்குமணன் சுக்கிரீவனை நேராக இடித்துஉரைப்பதும், சுக்கிரீவன் தான் செல்வத்தின் மதத்தினால் செம்மாந்துவிட்ட செய்தியை அமைதியாகக் காட்டிப்பிழைபொறுக்கச் சொல்லியதும், அக் காரணத்தின் அமைதிக் கிணங்கிய இலக்குவன், தான் அவனை ஏசிய பிழையைப் பொறுக்குமாறு மன்னிப்புக் கேட்டுக்கொண்டதும் இக் கம்பர்நூலில் காணாமல் மறைந்தன.

இன்வாறு இலக்குவன் கூறக்கேட்ட,

வானர வேந்தனு மினிதின் வைகுதன்
மானவர் தலைமக னிடரின் வைகவே
யானது குரக்கினத் தெமர்கட் காமென
மேனிலை யிழிந்துயிர் விம்மி னானரோ

[வானர அரசனாகிய சுக்கிரீவனும், மனுகுலத்தலைவனாகிய இராமபிரான் துன்பத்தில்ஆழ்ந்திருக்க நான்,இன்பத்தில் தங்கியிருக்க நேர்ந்த இது, குரங்கினத்தைச் சேர்ந்த என்போன்வர்களுக்குத் தகுவதாம், என்று கூறி, உடல் தளர்ந்து உயிர் வருந்தினான்]

வருந்தியவன் இனிச் சிறிதுங் காலந் தாழாமல் இராமபிரானைச் சென்று சேர்தல் முறைமை யென்பதுன்னி,

எழுந்தனன் பொருக்கென விரவி கான்முளை
விழுந்தகண் ணீரினன் வெறுத்த வாழ்வினன்
அழிந்தயர் சிந்தைய னனுமற் காண்டொன்று
மொழிந்தனன் வரனுழைப்போதன் முன்னுவான்

[சூரியனது புதல்வனாகிய சுக்கிரீவன், விரைந்து எழுந்தவனும், கண்ணீர் பொழிந்தவனும், வாழ்க்கையை வெறுத்தவனும், அழிந்துசோர்கின்ற மனமுடையவனும் ஆகி, சிறந்தவனாகிய இராமபிரானிடம் செல்லநினைத்து, அநுமானை நோக்கி (பின்வருமாறு) ஒரு வார்த்தை கூறினான்]

போயின தூதரிற் புகுதுஞ் சேனையை
நீயுடன் கொணருதி நெறிவ லோயென
ஏயின னனுமனை யிருத்தி யீண்டென
நாயக னிருந்துழிக் கடிது நண்ணுவான்

[நன்னெறி ஒழுகுவதில் உறுதியுடையவனே, போயிருக்கின்றதூதர்கள் திரட்டிவருகின்ற வானரச்சேனையை, நீ பின், உன்னுடன் அழைத்துக்கொண்டு வருவாய், அதுவரையில் நீ இவ்விடத்தே இரு, என்று அனுமனுக்குக் கட்டளையிட்டு, இராமபிரான் இருந்த இடத்திற்கு வேகமாகச செல்பவன் ஆனான்]

முன்னே வாலி தனக்கிழைத்த தீங்கைத் தீர்க்குமாறு இராமபிரானைத் தஞ்சம் புகுந்த அச்சுக்கிரீவனிப்பொழுது தானேசெய்த பிழையைத் தாங்கினவனாக அவன்பால் சென்றுநிற்க நேர்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

7-ம் பத்து, 7-ம் தசகம்.

[317-வது பக்கத் தொடர்ச்சி]

8-ம் பாசுரம்

கோளிழைத் தாமரையும் கொடியும்
பவளமும் வில்லும்
கோளிழைத் தண்முத்தமும் தளிரும்
குளிர்வான் பிறையும்
கோளிழை யாவுடைய கொழுஞ்சோதி
வட்டங்கொல் கண்ணன்
கோளிழை வாண்முகமாய்க் கொடியேனுயிர்
கொள்கின்றதே.

அவதாரிகை:—இப்பாசுரத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவானின் திருமுகமண்டலம் (கண்ணன்) அஸாதாரணமான அழகு வாய்ந்து தம்மைக் கொன்று தொலைக்கின்றதென்று குறை கூறுகிறார்.

பதக்குறிப்புக்கள்:— கோள்-காந்தி - அழகு - இவ்வர்த்தங்களில்உபயோகப்பட்டிருக்கின்றது. தாமரையும் புஷ்பங்களின்ஒளியும் பிரகாசமும் கல்பகத்தருவைப்போன்று எங்கும் சோபையோடு விளங்குகின்ற திவ்விய தேஹமும், பவழம் கோத்தாப்போ லுள்ள தருக்களும் இந்திரநீலமணிபோலுள்ள வில்லையேந்தி இரத்னங்களின் சோபையோடு,பலவிடத்திலும் முத்துக்களின் உள்ளொளியும் காந்தியும் இவ்வளவும் சுக்கிலபக்ஷ சந்திரனிடத்தில் ஒன்றுசேர்ந்து ஜோதி வட்டமென்று சொல்லலாகும்படி ஸ்ரீ கண்ணபகவானுடைய வாள்முகமென்று பெயரிட்டுக்கொண்டு ஓர் வஸ்து பாவியாகிய என்னை வருத்துகின்றது.

9-ம் பாசுரம்

கொள்கின்ற கோளிருளைச் சுகிர்ந்திட்ட
கொழுஞ் சுருளின்
உள்கொண்ட நீல நன்னூல் தழைகொல்
அன்று மாயன்குழல்
விள்கின்ற பூந்தண் துழாய் விரைநாறவந்
தென்னுயிரைக்
கள்கின்றவா றறியீர் அன்னைமீர்
கழறா நிற்றிரே.

பதக்குறிப்புக்கள்:—கொள்கின்ற -விழுங்குகின்ற; எல்லாத்திக்கிலும் இடைவீடின்றி பிரளயகாலத்தில் இருள் வியாபிக்கு மென்கின்றார். சுகிர்ந்திட்ட சுருளின் - மாசு நீக்கிய பஞ்சுச்சுருளின். உள்கொண்ட ......தழை - பருத்திச் சுருளை உருட்டி அமைத்துப் பிடித்து அதினின்றும் நூல்களை இழுத்து வலிக்க நூற்றுப் புறப்படும் விகஸிதமான நூற்றொகையைத் "தழை"யாக விவரிக்கின்றார். பிரளயகால பலமான இருட்டில் வெளுத்த அம்சமே கிடையாது. அப்படியுண்டாயினும் அவற்றையும் களைந்து சுத்தப்படுத்திக் கருப்புநூலை நூற்று இழைத்து இயற்றினால்கூட ஸ்ரீ கண்ண பகவானின் திருமுடி கேசபுஞ்சம் முதலியன அதிநீலமான ஒரு சுருட்டிலிருந்து இழுபடும் நன்னூலுக்கு ஒப்புத்தானாகுமோ. அன்று மாயன் - திரேதாயுகத்தில் ஆச்சரியபூதனான கண்ணபிரான்; விள்கின்ற திருத்துழாயின் வாசனை மூக்கைத் துளைக்கிறதென்று திருவுள்ளப்பட் டுரைக்கிறபடி. கள்கின்றது - களவாடுகின்றது, உயிரை அபஹரிக்கின்றது. நான் கிருஷ்ணபகவான் கேசபாசங்களின் திவ்வியாலங்கார அதிசீதளமாய்த் தளதளத்துக் கருத்துத் திகழ்கின்ற நீலக் கற்றையினின்றும் அதிமனோஹரமான திருத்துழாய் வாஸனை புறப்பட்டு வீசுவதிலகப்பட்டு உழன்று வருந்தாநின்றேன். நீங்கள் இதை அறியாமல் இடித்துப் பேசிக் கழறுகின்றீர்களே; அன்னைமாரே, ஸந்தர்ப்பப் பொருத்தமில்லாமல் ஏதாவது ஒன்றைச் சொல்லி அறியாமையால் குற்றம் சாட்டுகிறீர்கள்.

10-ம் பாசுரம்.

நிற்றி முற்றத்து ளென்று
நெரித்த கையினரா யென்னைநீர்
சுற்றியும் சூழ்ந்தும் வைதீர்
சுடர்ச்சோதி மணிநிறமாய்
முற்றவிம் மூவுலகும்
விரிகின்ற சுடர்முடிக்கே
யொற்றுமைக் கொண்ட துள்ள
மன்னைமீர் நசையென் னுங்கட்கே.

பொழிப்புரை:— தன் வீட்டு முற்றத்தே நின்றாயென்று அயுக்தம் செய்ததாகக்கொண்டு என்னுடைய தற்காலநிலையையறிந்த நீங்கள் விடாதே சுற்றியும் சூழ்ந்தும் என்னை வையாநின்றீர். நிரவதிக தேஜஸையுடைய ரத்னங்களுடைய வொளியையுடைத்தாய்க்கொண்டு சமஸ்த உலகங்களையும் ஓரிடமழியாமல் வியாபித்து ஒளியை வீசுகின்ற திருவபிஷேகத்திலே கிரீடத்திலே என்னுடைய உள்ளமகப்பட்டு ஆழ்ந்துபோய்விட்டது. இனி என்னைப் பொடிந்து அன்னைமீர்கள் உங்களுக்கு ஒரு பிரயோஜனமில்லை, என்கிறாள்.

பதக்குறிப்புக்கள்:— நெரித்தகையினராய் - மன வருத்தத்தால் கைகளைச் சொடுக்கி வசை வார்த்தைகளை அன்னைமார் சொல்வதாகக் கூறுகிறபடி. நசையென் - நான் நாயகனால் படுகின்ற மனோவருத்தத்தில் மாண்டுபோவேன், உங்களுக்காசைவேண்டாமென்று வற்புறுத்துகிறபடி.

11-ம் பாசுரம்.

கட்கரிய பிரமன் சிவனிந்திர னென்றிவர்க்குங்
கட்கரிய கண்ணனைக் குருகூர்ச் சடகோபன்சொன்ன
உட்குடையாயிரத் துளிவையு மொருபத்தும்வல்லா
ருட்குடைவானவரோடுடனாயென்று மாயாரே.

உரை:—கட்கரிய-கண்களால் காணுதற்கு அஸாத்தியமான பிரமன் பரமசிவன் இந்திரன், என்ற பிரஸித்தமான பரதேவதைகளும், கட்கரிய - சுலபமாகக் காணக்கூடாத, கண்ணன் - என் உள்ளத்திலும் கண்களிலும் சதா தென்படும் பிரிய தரிசனமுடைய கண்ணபிரானை, குருகூர்ச் சடகோபன் சொன்ன, உட்குஉரை - பகவானின் திவ்விய குணங்களின் சக்தியை வர்ணித்துள்ள இவையும் ஓர் பத்தும் - இவ்வாச்சரியமான இந்தப் பத்தும், உட்கு - விசேஷ சக்தியை அதாவது பகவானின் ஸேவையை எக்காலத்தும் அநுபவிக்கும் பாக்கியத்தை, உடைய - நற்பேராகப் பெற்ற, வானவரோடு - நித்திய ஸூரிகளுடன், என்றும் மாயாரே - பிரிந்து மனக்கிலேசமடையமாட்டார்கள். எப்போதும் பேராநந்தத்தை வானவருடன் கூடியிருந்து ரஸிப்பார்கள்.

விசேஷக் குறிப்பு:—இத்தசகத்தில் ஆழ்வார்போலப் பகவானிடத்தில் மோஹங்கொண்டு அவனின் திவ்விய ஸௌந்தரியத்தைக் கண்ணால்கண்டு களிக்க வேண்டுமென்ற தீவிர ஆசை தூண்ட அவனின் உருவத்தைக் காண ஏலாததினால் சிலபோது உருவெளித்தோற்றம் ஏற்பட்டு, அதாவது மனதால் ஒருவாறு நிஜம்போல் காணுவதாக நினைத்து அதினால் வருந்துகிற சமயங்களிலும் இவ்வண்ணம் மோஹித்த பக்தர்களுங்கூட நசையற்று மாழாந்துபோகாமல் அவனைக் கைவிடாது மேன்மேலு மநுபவிக்கத் தன் ஸௌந்தரியத்தைக் காட்டி விசதம்போல் தோற்றுவித்துத் தேற்றுவானென்று கற்பிக்கிறார்.

உதயண சரிதம்

குறிப்பு

பெருங்கதை யென்ற உதயணன் கதை தமிழில் அருகமதச் சார்பாகவே நமக்குக் கிடைத்திருக்கின்றது. புத்தமதச் சார்பாகத் திரிபிடகத்திலே உதயணனுடையகதை யொன்று கேட்கப்படுகிறது. அதற்கும் பெருங்கதை வரலாற்றுக்கும் பெரிதும் மாறுபாடு காணப்படுகின்றது. எல்லோரும் படித்து இன்புறும் பொருட்டு ஈண்டு அது எழுதப்படுகிறது.

உதயணனது பிறப்பும் இளமையும்

முன்னொரு காலத்திலே அளகப்பன் என்று ஓர் அரசனும் வேததீபகன் என்று ஓர் அரசனும் சேர்ந்தாற்போலிருக்கும் நாடுகளில் அரசாண்டுவந்தனர். அவர்கள் இளமையிலிருந்தே தோழமை பூண்டவர்கள். ஒரு குருவினிடத்திலேயே வித்தைகற்றவர்கள். இவர்கள் வெகுநாள் அரசாண்டபின் மக்கள் பிறப்பதையும் இறப்பதையும் இந்தப் பூவுலகில் ஒன்றும் நிலையாமையையும் கண்டனர். 'ஒருவன் உயிர் துறக்கும்போது ஒன்றையும் கூடக் கொண்டுபோக இயலாது; தன் உடல் உள்பட எல்லாவற்றையும் இந்த உலகிலேயே விட்டுச் செல்லவேண்டும்' என்பதை அவர்கள் நிச்சயித்து இந்த உலகினின்றும் நீங்குவதாகத் தீர்மானித்தனர்.

அதன்படியே தங்களுடைய நாடுகளைப் பெண்டு பிள்ளைகளிடம் ஒப்படைத்துவிட்டுக் காட்டினிற்குச் சென்றனர். அங்கும் இருவரும் சேர்ந்துவாழ்ந்தால் துறவுஏற்படாதென்று நிச்சயித்துச் சற்றுத்தூரத்திலுள்ள இரண்டு மலைகளில் இருவரும் வசிப்பதாகத் தீர்மானித்தனர். அவரவர் உயிரோடு இருப்பதைக் குறிக்க ஒவ்வொரு உவாதோறும் தீமூட்டி வெளிச்சம் காட்டுவதென நிச்சயித்துப் பிரிந்தனர். சிறிது நாளில் வேததீபகர் இறந்தனர். அவர் முன்னாளிற் செய்த புண்ணியத்தினாலே தேவர்களுக்கு இறைவனாகப் பிறந்து சகல பாக்கியங்களையும் அனுபவித்து வந்தார். ஒருநாள் இவர் தனதுநண்பனை அளகப்பரைக் காணத் தன்னுடைய தேவஉடலை நீத்து யாத்திரிக வேடங்கொண்டு வந்தார். அளகப்பரைக்கண்டு வந்தனைபுரிந்து நின்றார்.

அள:— நீர் எங்கிருந்து வருகிறீர்?

தேவ:—பெரியோரே, நான் ஒரு யாத்திரிகன், வெகு தொலைவிலிருந்து வருகிறேன். ஐயரே! நீர்மாத்திரம் தனிமையில் இங்கு வசிக்கின்றீரே; உமக்கு உற்ற துணை ஒருவருமில்லையா?

அள:—எனக்கு ஒரே ஒரு நண்பன் உண்டு.

தேவ:—அவர் எங்கே?

அள:—அவர் அதோ தோன்றும் மலையில் இருக்கின்றார். ஆயினும் அவர் உவாநாளில் நீமூட்டாமையில் இறந்துபட்டிருக்கவேண்டும்.

தேவ:—அப்படியா ?

அள.—ஆம்.

தேவ:—அவரே நான்.

அள:—அவ்வாறானால் நீர் எங்குப் பிறந்திருக்கின்றீர்.

தேவ:—நான் மிக்க வல்லமையுடைய தேவர்கள் தலைவனாகப் பிறந்திருக்கிறேன். தங்களைக் காணும் பொருட்டு வந்தேன். இங்குத் தாங்கள் சுகமாக வாழ்கின்றீர்களா? அன்றித் துன்பமேதேனும் உண்டோ?

அள:—நான் யானைகளால் துன்புறுகிறேன்.

தேவ:—எவ்வாறு?

அள:— நான் பெருக்கிச் சுத்தம் செய்துவைக்கும் இடமெல்லாம் யானைகள் இலத்திகளையிட்டு அசுத்தமாக்குகின்றன. அதனால்உண்டாகும் நாற்றம் பொறுக்கமுடியவில்லை.

தேவ:—அப்படியா! அவற்றை விரட்டிவிடத் தங்களுக்கு மனமுண்டோ ?

அள:—ஆம்; சகோதரரே.

தேவ:—அவ்வாறாயின் அதற்கு ஒரு உபாயம் செய்கிறேன்.

இவ்வாறு கூறி வேததீபகனாகிய தேவர் அவருக்கு யாழொன்று கொடுத்தார். அதனில் மூன்று தந்திகள் இருந்தன. மூன்று தந்திகளுக்கும் மூன்று மந்திரம் கற்றுக்கொடுத்தார். முதல் தந்திக்கு உரித்தாகிய மந்திரத்தை உச்சரித்துத் தந்தியைத் தெறித்தால் யானைகள் திரும்பிப் பார்க்காமல் ஓடும். இரண்டாவது தந்திக்கு உரிய மந்திரத்தைக்கூறிஇரண்டாவது தந்தியைத் தெறித்தால் யானைகள் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு ஓடும். மூன்றாவது மந்திரத்தை யுச்சரித்துக்கொண்டு அதற்கு உரிய தந்தியைத் தெறித்தால் யானைகளின் அரசு வந்து கழுத்தில் ஏற்றிக்கொண்டுசெல்லும். அதுமுதல்அளகப்பரையானைகள் தொந்தரவு செய்வதேயில்லை.

இவ்வாறு இவர் தொந்தரையின்றி வாழ்கின்ற காலத்திலே கோசாம்பியில் பரந்தபன் என்று ஓரரசன் அரசாண்டுகொண்டிருந்தான். ஒருநாள் மாலைப் பொழுதில் அவன் தன் பட்டமகிஷியோடு உய்யானவனத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். அந்தக் காலத்திலே பட்டமகிஷி கருவுற்றிருந்தாள். தன் கணவன் கையிலிருந்த கணையாழியை மெல்லக் கழற்றித் தன் கையில் போட்டுக்கொண்டு அருகிலிருந்த தன் கணவனுடைய சிவப்புப் போர்வையைப் போர்த்துக் கொண்டாள். அந்தச் சமயத்திலே அவ்விடத்தில் மேலே பறந்து சென்ற பெரும் பறவையொன்று இவள் ஒரு மாங்கிசத்துண்டென்று நினைத்துக் கீழே நோக்கி இறங்கி வந்தது. அரசன் அதனைக் கண்டவுடன் அரண்மனைக்குள் ஓடிவிட்டான்; இராணிக்கு அது இயலாமையினாலே பறவை பறந்துவந்தவுடன் ஓட முடியவில்லை. அது அவளைக்கௌவிச்சென்றது. ஆயினும் அவள் கெட்டிக்காரி யாகையால் அப்பறவை தூக்கிச் செல்லும்போது கூச்சற் போட்டால் தன்னைத் திடீரெனக் கீழேபோட்டுவிடும் என்று எண்ணிக் கூச்சலிடாமல்இருந்தாள். அந்தப்பறவைஐந்து யானைப் பலம் உடையதாக விருக்குமாம். அதனால் தான் தூக்கிச்செல்லும் மாங்கிசபிண்டத்தைத்தான் விரும்பிய இடத்திற்கு மிக்க சுலபமாகக் கொண்டு செல்லுமாம்.

இமயமலைச் சாரலிலே ஒரு பெரிய மரம் இருந்தது. அதன் கிளைகளிலே உட்கார்ந்து இந்தப்பறவை இரையை உண்பது வழக்கம். அந்த வழக்கப்படியே பறவையானது இராணியைத் தூக்கிச் சென்று இருகவரான ஒருகிளையில் இறக்கிற்று. மரத்தின் கீழேயிருந்து மேலே ஏறும் வழியைப் பார்த்து ஒருவருமில்லை யென்று தெரிந்தபிறகே பறவைகள் உண்பது வழக்கம். அந்த வழக்கப்படியே இந்தப் பறவையும் பார்த்தது. இராக்கினி இதுதான் நல்ல தருணமென்றெண்ணி இரண்டு கைகளையும் விரித்துத் தட்டிச் சத்தமிட்டாள். பறவை பயந்து ஓடிவிட்டது.

இருட்ட ஆரம்பித்தவுடனே இராணிக்குப் பிரசவ வேதனைஉண்டாயிற்று.அந்தவேளை உலகமுழுவதும் இருள்மூடிக் கொண்டு காற்றும் மழையும் அடித்தது பாவம்!! இவளுக்கு ஆறுதல் செல்லுவார் அங்குஒருவரும் இல்லை. இரவு ஏற வேற மழையும் நின்றது. வானமும் வெளுத்தது; விடியற்காலையில், சூரியன் உதிக்கும் சமயத்தில் அவளுக்கு மகன் பிறந்தான். அவன் காற்று (உது) அடித்தபோதும் மலையிலும் அருணோதயத்திலும் பிறந்ததால் அவனுக்கு உதயணன் என்று பேரிட்டாள்.

இந்த ஆலமரத்துக்கு அருகிலேதான் அளகப்பர் தவப்பள்ளி இருந்தது. மழைகாலத்தில் அவர் காட்டினுள் சென்று காய்கனி முதலியன சேகரிப்பதில்லை. அப்பொழுது இந்த ஆலமரத்தடிக்குவந்து சென்ற இரவில் பறவைகள் தின்று கழித்த எலும்புகளைப் பொறுக்கிக் கொண்டுபோய் இடித்துக் கஷாயம் போட்டுக் குடிப்பது வழக்கம். அந்த வழக்கப்படியே, அந்த முனிவர் ஆலமரத்தடிக்கு எலும்புபொறுக்க வந்தார். அங்கே குழந்தை அழுகையொலி கேட்டது. அவர் அணுகி பார்த்தார்; இராணியைக் கண்டார்.

முனி:—நீயார்?

இரா:—நான் ஒரு பெண்பிள்ளை.

முனி:—நீ இவ்விடம் எப்படி வந்தாய்?

இரா:—என்னை ஒரு பெரும் பறவை தூக்கி வந்தது.

முனி:—கீழே இறங்கிவா.

இரா:—பெரியோரே! சாதி மாறுபாட்டால் நான் கீழேவர இயலாது.

முனி:—நீ என்ன ஜாதி?

இரா:—நான் க்ஷத்திரிய ஜாதி.

முனி:—நானும் க்ஷத்திரியன்தான்.

இரா:—அவ்வாறானால் க்ஷத்திரிய தருமத்தைக் கூறுவீராக.

முனி:—கேள்! இதுதான் க்ஷத்திரிய தருமம.

[அவர் க்ஷத்திரியதருமம் இதுவெனக் கூறினர்.]

இரா:—இனி, மரத்தின் மேலேறி இந்தக் குழந்

தையைக் கீழே கொண்டுபோம். நான் பின்னே வருகின்றேன். என்னைத் தீண்டாதீர்.

முனிவர் மெல்லமரத்தின்மேலேறிக்குழந்தையைக் கீழே கொணர்ந்தார். பின்னே இராணியும் இறங்கிக் கீழே வந்தாள். இவர்கள் இருவரையும் முனிவர் தன் ஆச்சிரமத்திற்கு அழைத்துச்சென்று காப்பாற்றி வந்தார். அவளும் கற்புநிலை வழுவாது காலந்தள்ளி வந்தாள். இவ்வாறு சிறிதுநாள் செல்லவே, இராணி யோஜித்தாள். நமக்கோ இந்த இடத்திலிருந்துவெளியிற்செல்ல வழிதெரியாது; இவரோ துறவி; 'சன்னியாசிப் பயணம் திண்ணையைவிட்டு இறங்கினாலாச்சு' என்றபடி இவர் எங்கேயாவது சென்றுவிட்டால் நானும் குழந்தையும் பட்டினிகிடந்து உயிர் விடவேண்டும். ஆதலினாலே அவரை எவ்வாறாவது மயக்கி அவரது விரதத்தைக் கலைத்துவிடவேண்டும்;' இவ்வாறு யோசனை பண்ணிக்கொண்டு அவள் தனது துணிகளை நழுவவிட்டு அவருக்கு ஆசையை யுண்டாக்கினாள். அவரது விரதத்துக்குக் கேடு உண்டாகும்படி செய்தாள். அவரும் மயக்கமடைந்து அவளைக் காதலித்தார். அது முதல் இருவரும் ஒன்றாக வாழ்ந்துவந்தார்கள்.

ஒருநாள் அந்த முனிவர் நட்சத்திர சமாகமங்களைக் கவனித்து, 'பெண்ணே! கோசாம்பி அரசனான பரந்தபன் இறந்துபட்டான்' என்றார். பெரியோய்! ஏன் இவ்வாறு கூறுகிறீர்? அவர் உமக்கு என்ன தீங்கு செய்தார், என்றாள் இராணி. 'எனக்கு அவர்மேல் விரோதம் ஒன்றுமில்லை, அம்மா! அவருடைய பிறந்தநட்சத்திரத்தைக்கவனித்தேன், அதுகொண்டு இதனைக் கூறினேன்' என்றார். இதனைக் கேட்டவுடனே இராணி வாய்விட்டு அலறினாள். அவள் அழக் காரணமென்ன என்று முனிவர் கேட்டபோது அந்தப் பரந்தபன் தன்கணவனென்று அவள் கூறினாள். இந்தஉலகத்திற் பிறந்தவர்களெல்லாம்இறப்பதுஇயற்கை யென்றும் அதற்காக அவன் வருந்தவேண்டாமென்று முனிவர்அவளைத் தேற்றினார். அவள் அதற்காக வருந்தவில்லையென்றும் தன்னுடைய பிள்ளைக்கு இராஜ்யம் கிடைக்காமல் மற்ற நாட்டு மக்களைப்போல நின்று தவிக்கவேண்டிவருமே என்றும் கவலைப்படுவதாகக் கூறினாள். அவ்வாறாயின் தான் அந்த இராச்சியத்தை அவனுக்கு வாங்கித்தருவதாக முனிவர் கூறினார்.

பின்னர் உதயணனை அழைத்து அவனுக்குத் தன்னுடையயாழையும்அதற்குரிய மந்திரவித்தைகளையும் கற்றுக்கொடுத்தார். அந்தக்காலத்திலேயானைகள்கூட்டம் கூட்டமாக ஆலமரத்தடிக்கு வந்துகொண்டிருந்தன. ஒருநாள் அம்முனிவர் உதயணனை அழைத்து யானைகள் வருமுன் அந்த ஆலமரத் தடிக்குப்போய் அதனில் ஏறிக்கொண்டு யாழில் முதல்நரம்பைத் தெறித்து அதற்குரிய மந்திரத்தைக் கூறும்படி கூறினார். உதயணனும் அவ்வாறே ஆலமரத்தடிக்குச் சென்று மரத்திலிருந்துகொண்டு வீணையை மீட்டி மந்திரத்தைச் சொன்னான். யானைகளெல்லாம் மிரண்டு ஓடிவிட்டன. அதனை வந்து முனிவரிடம் சொன்னான்.

இரண்டாம்நாள் முனிவர் இரண்டாவது தந்தியைத் தட்டி அதற்குரிய மந்திரத்தை உச்சரிக்கச் சொன்னார். யானைகளெல்லாம் அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு ஓடின. அதனையும் வந்து சிறுவன் சொன்னான்.

பின்னர் முனிவர் இராணியைப்பார்த்து 'அம்மா! இனிஉன் பிள்ளைக்குச்சொல்லவேண்டியதைச்சொல்; அவன் இங்கிருந்து புறப்பட்டுச் சென்று மன்னவனாவான்' எனறார். இராணி உதயணனைப் பார்த்து 'நீ கோசாம்பி சென்று ஜனங்களைப்பார்த்து "நான் பரந்தபனுடைய மகன். என்னை ஒருபெரும்பறவை தூக்கிச்சென்றுவிட்டது என்றுசொல். அதனைஅவர்கள் ஒப்புக்கொள்ளா விட்டால் அங்குள்ள சேனைத் தலைவர் முதலியோருடைய பெயரைச் சொல். அதையும் கேட்டு அவர்கள் உன்னைஅரசனாக ஒப்புக்கொள்ளாவிட்டால்இந்தமோதிரத்தையும்செவ்வாடையையும் காட்டு" என்றுசொல்லி அனுப்பினாள்.

உதயணன் முனிவரைப் பார்த்துத் தான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். அவர் உதயணனுக்கு யானையரசன் பணிவதற்குரிய மந்திரத்தைக் கூறி, 'இத்த மந்திரத்தை யுச்சரித்து நீ யாழைத் தட்டுவாயானால் அரசயானை வரும்; அதன்மேல் ஏறிச் சென்று உன் அரசாட்சியை அடைவாயாக' என்று கூறி ஆசீர்வதித் தனுப்பினார். அவ்வாறே உதயணன் யானை யரசன்மேல் ஏறிக்கொண்டு 'நான் கோசாம்பி அரசன் பரந்தபன்மகன்; எனக்கு என்னுடைய இராச்சியம் கிடைக்கும்படி செய்' என்று யானையின் காதில் ஓதினான்.

அந்தயானை உடனே எல்லா யானைகளையும் வந்து கூடும்படிசெய்துஅவற்றுள் கிழமான வற்றையும்சிறு கன்றுகளையும் விலக்கிவிட்டு, பெரும் யானைப்படையோடு கோசாம்பி நோக்கிச் சென்றது.

இவர்கள் தங்கிய முதல் ஊரில் உதயணன் தான் கோசாம்பி அரசனென்றும் தன்னோடு வருபவர்கள் எல்லாகும் வரலாமென்றும்கூறினான். பலபேர் புறப்பட்டனர். இப்படியாகப் பெரும் படையோடு உதயணன் கோசாம்பியைச் சென்றடைந்தான் அவ்வூரை முற்றுகையிட்டுத் தன்னுடன் போருக்கு வரும்படி உள்ளிருந்தவர்களை அழைத்தான். அங்கிருந்த ஜனங்கள் கோட்டைவாயிலை அடைத்துக்கொண்டு தாங்கள் இவனோடு போர்புரியவும் ஆயத்தமாக இல்லையென்றும் அரசனாக ஏற்கவும் முடியாதென்றும் கூறினார்கள். தங்களுடைய இராணியை ஒரு பெரும் பறவை தூக்கிச்சென்றதென்றும் அந்தக்காலத்திலே இராணி கருவுற்றிருந்தாளென்றும் அவளுடைய செய்தி தெரியும்வரையில் தாங்கள் ஒன்றும் செய்ய முடியாதென்றும் கூறினர். உதயணன் உடனே தன்னிடமிருந்த சிவப்புக் கம்பளத்தையும்முத்திரை மோதிரத்தையும்காட்டினான். ஜனங்கள் அவற்றைப் பார்த்தபின் இவனை அரசனாக ஏற்றுக்கொண்டனர். இவன் அரசுரிமையைப் பூண்டு அரசாட்சி செய்து வந்தான்.

(தொடரும்)

சூரியன்

[314-வது பக்கத் தொடர்ச்சி]

சூரிய குடும்பம்

8. நிருதி (Uranus)

மின்செய்வா ளெயிற்றரக்கர் மற்றெவருக் கும்வினையாற்
றுன்பு ருதுவாழ்நிரு தியாந்தூயவன் றனையும்

இலிங்க புராணம் - 56 அத்—7.

இராகு கேது:—நமதுதேசத்தாருக்குப் பல நாளாகச் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது என்ற ஒன்பது கிரகங்களைத் தவிர, வேறு கிரகங்கள் இருந்தனவாகத் தெரியாது. இவைகளில், இராகு கேது இரண்டையும், சாயாகிரகங்கள் என்னக் கூறிவந்தனர். இவைகள், சூரியவீதியாகிய ராசிகளில், நடமாடுகின்றன என்றும், அவற்றின் நடை, ஏனைய கோளங்களுக்கு எதிரிடையான நடையென்றும், கூறினர். ஏதோ ஒருவகை கணக்கின்படி, இவை சூரியனையும் சந்திரனையும் பற்றுவதாகக்கூறி, அவ்வாறு பற்றுவதே கிரகணமாகும்எனவிளக்கி, தங்கள்கணக்கின் படிகிரகணம்வரும் காலத்தைத் தவறாமல் கணக்கெடுத்துக் காட்டலாயினர். சாயாகிரகம் என்பது, நிழற்கோள் எனப் பொருள் படும். நிழலே கோள் என்றேனும், நிழலடைந்தாற்போல ஒளியின்றித் தோன்றும் கோள் என்றேனும், பொருள் கொள்ளலாம் அன்றோ? மற்றைய கோள்களோடும் இவற்றையும் எண்ணி, நவக்கிரகங்கள் எனக் கணக்கெடுத்திருப்பதால், இராகு கேதுக்களையும் தொடக்கத்தில், மற்றைய கோள்களைப் போல, ஸ்தூல வடிவுடையன வாகவே, கருதியிருந்தனர் எனலாம். பின்னே ஸ்தூல வடிவுள்ள கிரகங்களை விட்டுவிட்டு, கிரகணத்தை மனதிற்கொண்டு, பூமியின் நிழலையும், சந்திரன் நிழலையும், பிடித்துக் கொண்டனர் போலும். சனிக்கிரகத்துக்குப்பின்னேயுள்ள இரண்டு கிரகங்கள், சாதாரணமான கண்ணுக்குப் புலனாவதில்லை. ஆதலின், அவை நிழலடைந்தாற்போல இருண்டு தோன்றும் நிழற் கோள்களேயாம். அவ்வகையில், சாயாகிரகங்களேயாம். இவ்விரண்டு கிரகங்களை, ஸ்தூல வடிவமாக எண்ணி, எடுத்த கணக்குச் சூரிய குடும்ப முறைக்கு, இப்போது, பொருத்தமாக இருக்கிறது. நமது சூரிய சந்திர கிரகணங்களுக்கும், சனிக்கிரகத்திற்கு அப்பாலுள்ள இரண்டு கிரகங்களுக்கும் சம்பந்தம் சனிக்குமேலும் இரண்டு கோளங்கள் உண்டென்பது, நம்முன்னோர் துணிபு என நாம் அநுமானிக்கலாம். அவற்றின் உண்மை நிலை, மேனாட்டு நூதன கோள ஆராய்ச்சியினால், வலியுற்றது. சென்ற இரண்டு நூற்றாண்டுகளாய், மேனாட்டார் செய்துவரும் ஆராய்ச்சியின் பயனாக, ஒளியில்லாமையால் இராகு கேதுக்களாம் நிழற்கோள்களே எனத்தகும், உரானஸ் (Uranus)எனும் நிருதி மண்டலமும், நெப்டியூன் (Neptune)எனும் வருண மண்டமும், தூரதிருஷ்டிக்குப் புலனாகியுள்ளன. சூரியனுக்கு முடி சூட்டியபோதே, மலரவனார், வருணனுக்கும், நிருதிக்கும், குபேரனுக்கும், முடி சூட்டியதாக இலிங்கபுராணம் கூறுகின்றமையால், இக்கோள்களுக்கு இப்பெயர்களை வைத்தல் புராணத்திற்கு முரணாகாது.

கண்டு பிடித்தவர்:—1781-ம் வருஷம், மார்ச்சு மாதம் 13-ம்தேதி, செவ்வாய்க்கிழமை இரவு, சுமார் 11 மணிக்கு, ஹெர்ஷல் (William Herschel) என்பவர், தனது வீட்டின் தோட்டத்திலே, தான் செய்த சிறிய தூரதிருஷ்டிக் கண்ணாடியின் வழியே, நக்ஷத்திரங்களை ஆராய்ந்துகொண்டிருந்தார் அப்பொழுது, ஒரு பெரிய கோளம், அவருடைய தூரதிருஷ்டியின் எல்லைக்குள் நுழைவதைக் கண்டார். பின்பு பலநாள், இதனை உற்று நோக்கி, இது சனிக்கிரகத்திற்கு அப்பாலுள்ள ஒரு கோள் என நிச்சயித்தார். அக்காலத்து மன்னனின் பெயரையே இதற்குவைத்தனர் (Georgium Sidus.—The Georgian Star.) இவர் செய்த ஆராய்ச்சியை மெச்சி, அம்மூன்றாம் ஜார்ஜ் மன்னர், தனது சந்தோஷத்திற்கறிகுறியாக, ஹெர்ஷலுக்குப் பெரியதொரு பட்டம் (Knighthood) கொடுத்தார். அன்று முதல் ஸர் வில்லியம் ஹெர்ஷல் என்று வாழ்ந்துவந்தார்.

சில அளவுகள்:— சனி மண்டலத்திற்கு வெகுதூரத்தில் நிருதி மண்டலம் தோன்றுகிறது. இது சூரியனுக்கு 1,782,800,000-கல் தூரத்திலே இருக்கிறது. சூரியனுக்கும் சனிக்கும் இடையே, எவ்வளவு தூரம் உண்டோ, அவ்வளவு தூரந்தான், சனிக்கும் இந்தக் கிரகத்துக்கும் இடையே உண்டு. இது, கடற்பச்சை வர்ணமாக விளங்குகின்றது. இது பூமியைக்காட்டிலும் 15 மடங்கு பெரியது. இதன் குறுக்களவு 31,700 கல்லாம். இது, தன்னைத்தான் ஒருதரம் சுற்றிவர, ஏறக்குறைய 10 மணி 50 நிமிஷம் ஆகும். இது சூரியனைச் சுற்றியோட ஏறக்குறைய 84 வருஷமாகிறது. இதனை, நாம் எண்ணிப் பார்க்கையில், நமது ஜீவிய காலத்திலே, இக்கோள் சூரியனை ஒருமுறை சுற்றிவருவதைக்காண்பதும் அரிதெனத் தோன்றுகிறது. சூரியவெளிச்சம், நம்முலகில் எவ்வளவு வருகிறதோ, அதனில் 360-ல் ஒரு பங்கு சூரிய வெளிச்சமே, அக்கோளில் சென்று பாயும். ஆகையால், அவ்வுலகத்தில், சூரியன் வெப்பம் தாராது வெளிச்சம் மட்டுமே தருகிறான்.

உபகிரகம்; தூமகேது:—இக்கோளம் வெகுதூரத்தில் இருப்பதால், பெரிய தூரதிருஷ்டியைக்கொண்டு இதனைப் பார்க்கும்போதும், இது பெரிய உருவாகத் தோன்றவில்லை. இதனால், இதன் தன்மையை, இதுவரையில், ஒருவரும் கண்டுபிடிக்கவில்லை. இதற்கு உபகிரகங்கள் நான்கு உள்ளன. இவை, முறையே, எரியல் (Ariel), அம்பிரியல் (Umbriel), டைடானியா (Titania), ஓபெரான் (Oberan), எனப் பெயர் பெறுகின்றன. இவை, தூரதிருஷ்டியிலே, சிறு புள்ளிகளைப் போலவே, தோன்றுகின்றன. இக்கோள் இருப்பதாலேயே, பல தூமகேதுக்கள் சூரிய குடும்பத்தைவிட்டு நீங்காது, இதன் ஆட்சிக்கு உட்பட்டுச் சுழன்றுவருகின்றன. இதனைச் சேர்ந்த தூமகேது குடும்பங்கள் இரண்டு(Temple's Comet of 1366 Stephan's Comet of 1867). இக் கோளத்தைப் பற்றிய ஆராய்ச்சியை, மிக ஊக்கத்துடன், மேனாட்டு வானசாஸ்திரிகள் நடத்திவருகின்றனர்.

---

9. வருணன்

எய செம்மணி யெறிதிரைக்கட லெவற்றினுக்கும்
வாய்வி ரிந்ததார் வருணனும் வானவன்றனையும்
இலிங்கபுராணம் - (56 அத் - 3.)

கண்டுபிடித்தல்:—நிருதி மண்டலத்தைக் கண்டு பிடித்த பின்னர், அந்நிருதியின் வழி, அப்போதைக் கப்போது, மாறுதலடைவதைக் கண்டு, அக்கோளைப் பின்னிருந்து ஏதோ ஒரு கிரகம் பிடித்திழுக்கின்றது, என்று வானசாஸ்திரிகள் ஒரு முடிவிற்கு வந்தனர். கணிதமுறைப்படி, இவ்வாறு பிடித்திழுக்கும் கோள், வானத்தில் எவ்விடத்தில் இருக்கவேண்டும் என்று கணக்கெடுத்து, பெர்லின்நகரத்து கால்லே என்பவரொருவர், இதன்நிலையைச்சுட்டிக்காட்டினர். 'ஏதோ ஒரு மண்டலம் இருக்கவேண்டும்' என்று, இவ்வாறு, கணித சாஸ்திர மூலமாக நிரூபித்தனரேயன்றி, ஏறக்குறைய அறுபது வருஷம் வரை, தேடியும் இதனைத் தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியாலும், வானசாத்திரிகள் காணவில்லை. கால்லே (Galle) என்பவர் சுட்டிய இடத்தில் உற்று நோக்கி, இதனைக் கண்டு பிடித்தவர்கள், லெ வெரியர் (Le Verrier) என்பவரும், ஆடம்ஸ் (Adams) என்பவருமே யாவார்; 1846-ம் வருஷம் செப்டம்பர் மாதம், 23-ந் தேதி, இதனைக் கண்டுபிடித்தனர்; சமுத்திர ராஜனும் நெப்டியூனின் (Neptune) பெயரை இதற்கிட்டனர் அதற்கேற்ப நாமும் இதனை வருணன் என வழங்குவோம்.

சில அளவுகள்:—வருண மண்டலம், சூரியனுக்கு 2,775,000,000 கல் தூரத்தில் இருக்கிறது. பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடிக்கன்றி ஊனக்கண்ணுக்கு இது புலனாகாது. நிருதிமண்டலத்தைப்போல, இதுவும் பச்சை நிறமாகவே தோன்றுகிறது. ஆனால், இப்பச்சை நிறம், எக்காலத்திலும் விளங்காமல், சில காலத்திலே மட்டும் விளங்குகிறது. இவ்வாறு, இது நித்திய ஸ்வபாவமாகாமல், சிற்சிலபோது தோன்றி மறைதலால், இதனை, என்றைக்குமுள்ள இயற்கை நிறம் எனக் கூற இயலாது. பெர்னார்ட் (Bernard) என்னும் வான சாஸ்திரியார், இதன் குறுக்களவு 33,000 கல்லாம் என்று கணக்கெடுத்துள்ளார். இது, தன்னைத் தானே சுற்றிவர எவ்வளவு நேரம் பிடிக்கும் என்று அறிய, இதனிலே, ஏதேனும் ஓர் அடையாளத்தைக் குறித்துக்கொண்டு, அவ்வடையாளம்சுற்றிவர எவ்வளவு நேரமாகிறது என்று கணக்கிட வேண்டும். அவ்வாறு, குறித்து அறியக்கூடிய அடையாளங்கள் ஒன்றுமே தோன்றாமையால், இந்த நேரத்தை, நிர்ணயிக்க இடமேயில்லை. இந்தக்கோள், சூரியனைச் சுற்றிவர, 165 வருஷங்களாகின்றன. இந்தக் கிரகத்திலிருந்து, சூரியனைப் பார்த்தால், நம்முலகிலே வெள்ளி எவ்வளவு சிறிதாகத் தோன்றுகின்றதோ, அவ்வளவு சிறிதாகவே தோன்றும். ஆயினும், நமக்கு வெள்ளியிலிருந்து வரும் வெளிச்சத்தைவிட, வருணமண்டலத்திற்குச் சூரியனிலிருந்து வரும் வெளிச்சம் 250,000 மடங்கு அதிகம். இவ்வாறு, வெளிச்சம் அதிகமாக வந்தாலும், சூரியனிலிருந்து நமக்கு வரும் உஷ்ணத்தில், தொள்ளாயிரத்தில் ஒரு பங்கே, இவ் வருணமண்டலத்தை அடைகிறது. "இதனில் ஆறுயிர் ஜீவர்கள் வாழ்கின்றனரோ? வேறு எத்தகைய ஜீவராசிகளேனும் இருக்கின்றனவா?" என்று ஆராய்ந்து துணிந்து கூறத்தக்க ஆதாரங்கள், கிடைப்பதே அருமை.

உபகிரகமும் தூமகேதுக்களும்:- வருணனைச் சுற்றியோடும் சந்திரன் ஒன்றேயாம். இவ்வுபகிரகம் வெகு வேகமாயும், மற்றைய கோள்களுக்கு எதிர் முகமாகவும், ஓடுகின்றது. இதனைப் பற்றிய வேறுவிவரங்கள் ஒன்றும் தெரியவில்லை. வருணனுடைய ஆட்சிக்கு உட்பட்ட தூமகேதுக்கள் பல. 1910-ம் வருஷம் நமக்குத் தரிசனம் தந்த ஹாலீஸ் தூமகேது, (Halley's Comet) இதனைச்சிக்குட்பட்டது. ஈதன்றியும் ஏழு தூமகேதுக்கள், இதனெல்லைக்குள்ளடங்கி விளங்குகின்றன வென்று தற்கால வானசாஸ்திரிகள், கூறுகின்றனர். ஈதே, சூரிய மண்டலத்திற்கு எல்லைக்கல்லாக விளங்குகிறது.

---

10. குபேரன் (Pluto)

நிதிக்கெ லாமெதிர் பகைவர்வெண்
ணிணஞ்சுவைத் தழல்வாய்
கொதிக்கும் வேலுடைக் குபேரனும்
இயக்கர்கோ வினையும்
இலிங்க புராணம் (56. அத் - 4.)

அநுமானம்:—வருணமண்டலத்திற்குஅப்பாலும், இந்தச் சூரிய குடும்பத்தைச்சேர்ந்த கோள் ஒன்று, உளதோ வென்று ஆராய்வது, நவீன ஆராய்ச்சியேயாகும். நிருதிமண்டலத்தை, வருணன் வலித்திழுப்பதுபோல, வருணன் செல்லும் பாதையிலே, இவ்வருணனை ஏதோ ஒன்று வலித்திழுப்பதாகத் தோன்றுகின்றது. வருணனுக்கு அதீதமாகச் சில தூமகேதுக்கள் திரிந்துவருகின்றன. இவை, வேறொரு கோளுக்குள் ளடங்கியிருக்கவேண்டுமன்றோ? ஆகையால், இந்தக் காரணங்களைக் கொண்டு, வருணனுக்கும் அப்புறத்தே வேறொரு கோள் உண்டு என்று வானசாஸ்திரிகள் அனுமானிக்கின்றனர். இதற்குக் குபேரன் (Pluto) என்றும், பெயரிட்டுள்ளார்கள். நமக்கும், இக்குபேரனுக்கும் உள்ள தூரத்தையும் கணக்கெடுத்துள்ளார்கள். நக்ஷத்திரங்களில், மிகவும் சமீபத்திருக்கிற மகிஷாசுர மண்டலத்திலுள்ள அகர நக்ஷத்திரம் (Alpha centauri), எவ்வளவோ சிறிதாகத் தோன்றுகின்றது. இந்தக் குபேரமண்டலத்திலிருந்து பார்க்கும்போது, சூரியன் சற்றேறக்குறைய அவ்வளவு சிறிதாகவே தோன்றுமாம். நமக்கும் இவ்வகர நக்ஷத்திரத்திற்கும் உள்ள தூரம், ஓர் ஒளி விநாடிக்கு 186,500 கல்லாம் என்ற கணக்கில், ஏறக்குறைய ஐந்து ஒளி வருஷங்களாகும். இவ்வளவு தூரத்தையும், 5300 கல்லாகக் குறுக்குவோமானால் நமக்கும் குபேரனுக்கும் உள்ள தூரம், முக்கால் கல்லாகக் குறுகுமாம். வானசாத்திரிகள், இத்துணைக் கணக்கிட்டுவந்தாலும், ஈது, அநுமான எல்லையைத் தாண்டிப் பிரத்தியக்ஷ எல்லையைக் கிட்டவில்லை. மேல் நாட்டில் உள்ள, மிகப் பெரிய தூரதிருஷ்டியின்வழியாலும்கூட, இதனைக் கண்டவர்கள் ஒருவருமில்லை.

கிரக ரூப தூர தாரதம்யம்:—இச்சூரிய குடும்பத்திலுள்ள கோள்களில் ஒன்றிற்கொன்றுள்ள அளவின் வேற்றுமையையும், தொலைவின் வேற்றுமையையும், நமது மனத்திற் படியுமாறு, ஹெர்ஷல் என்பவர், கீழ்க்கண்டவாறு விளக்கி வைக்கின்றார். இரண்டடி

சுற்றளவுள்ள ஒரு பந்தை நடுவேயுள்ள சூரியனாகக் கொண்டால், இதற்கு 164 அடி தூரத்தில் வைத்த ஒரு பட்டாணியே வெள்ளியாம்; 430 அடி தூரத்தில் வைத்த மற்றொரு பட்டாணியே நமது பூமியாம். 654 அடி தூரத்தில் உள்ள ஒரு குண்டூசியின் தலையே செவ்வாயாம்; 1100 அடி தூரத்திலே உள்ள 30 சிறிய மணல்களே, சிறு கோளத்திரள்களில், நமக்குக் கட்புலன் ஆவனவாம்; அரைக்கால் தூரத்தில் உள்ள கிச்சிலிப்பழமே, வியாழனும்; $\frac{4}{5}$ கல் தூரத்தில் உள்ள கிச்சிலிப்பழமே சனியாம்; ஒன்றரைகல் தூரத்தே உள்ள ஒரு கொட்டைப்பாக்கே, நிருதியாம்; $2\frac{1}{2}$கல் தூரத்தே வைத்த பெரியதொரு கொட்டைப்பாக்கே வருணனும். இவ்வாறு இவற்றின் ரூப தூர தாரதம்மியத்தைச் சிறிது அறியலாம்.

ஒத்தெல்லோ

["Shakespeare's —"Othello"]

அங்கம் 2. களம் 3.

[310-வது பக்கத் தொடர்ச்சி]

ராடிரிகோவைத் துரத்திக்கொண்டு காஸ்ஸியோ மீண்டு வருகிறான்.

காஸ்ஸியோ:— ஏ துஷ்டா! ஏ கயவா![1]

மண்டானோ:—அடுத்த அதிகாரியே, என்ன நிகழ்ந்தது?

காஸ்:—அயோக்கிய னொருவன் எனக்கு என் கடமையைச் சொல்லித்தருவதா! அவ்வயோக்கியனைப் பிரம்புப் புட்டிலாக அடித்துவிடுகிறேன்.[2]

ராடரிகோ:—அடி என்னை! [3]

காஸ்:—பிதற்றுகின்றாயா நீ, துஷ்டா?

[ராடரிகோவை அடிக்கின்றான்]

மான்:—வேண்டா, நல்லவென் அடுத்த அதிகாரியே-(காஸ்ஸியோவின் கைகளைப்பிடித்துக்கொண்டு) ஐய, உன்னை வேண்டிக்கொள்கிறேன்[4].

காஸ்:— என்னைப் போகவிடு, ஐயா, இல்லையேல் உன் தலைமேற் புடைப்பேன்.

மான்டா:—வா, வா, குடித்திருக்கின்றாய் நீ.

காஸ்:—குடித்தா!

[இருவரும் சண்டை செய்கின்றனர்.]

இயாகோ:—(ராடரிகோவிற்குஒருபுறமாய்)சொல்கின்றேன், இதைவிட்டுப் போ! வெளியே போய், கலகம் என்று கூக்குரலிடு. [5]

[ராடரிகோ போகின்றான்]

வேண்டா, நல்லவென் அடுத்த அதிகாரியே-ஐயோ, பெருமக்களே! உதவிக்கு வாருங்கள், ஹோ! அடுத்த அதிகாரியே,—ஐயா—மான்டானோ-ஐயா;—உதவிக்கு வாருங்கள், ஐயன்மீர்!—நல்லகாவல் இது உண்மையே! [6]

[7] [மணி அடிக்கின்றது]

மணியை அடிப்பது யார்?—பேய்களே, ஹோ! [8] பட்டினம் எழுந்துவிடுமே. சீ, சீ, அடுத்த அதிகாரியே, நிறுத்து!என்னாளும் நீ நாணவேண்டியவனாவாய்[9].

[ஒத்தெல்லோ தன் பரிவாரத்தினருடன் வருகிறான்.]

ஒத்:—என்ன நடக்கின்றது இங்கே?

மான்:—இன்னும்இரத்தம் பெருகுகின்றது: சாகுமளவு யான் புண்ணுற்றிருக்கின்றேன்.

ஒத்:—உங்கள் உயிரிற்காக நிறுத்துங்கள்![10].

இயாகோ ஏவியபடி ராடரிகோ, காஸ்ஸியோவைத் தொடர்ந்து சென்று அவனுக்குக் கோபம் உண்டாகும்படி செய்து கலகம் விளைக்க, மதுவெறியுற்றிருந்த காஸ்ஸியோ, தன்வயமற்றவனாகி ராடரிகோவை அடித்துத் துரத்திக்கொண்டு மீண்டுங் களத்தினுள் வருகின்றான். இயாகோ எண்ணியவாறே கருமமும் ஆகின்றது:

(1) இவை ராடரிகோவைக் குறித்துச் சொன்னவை.

(2) பிரம்புப் புட்டில்-பிரம்பினால் பின்னிய கூடை. இது கண்கண்ணாக இடைவெளியிட்டுப் பின்னப் பெற்றிருக்கும். பிரம்புப் புட்டிலாக அடித்துவிடுகின்றேன்-பிரம்புக்கூடை போல் தோன்றும்படி இவன் தோல் ஆங்காங்கு அறுந்து தொங்குகின்றவரையில் இவனை அடிப்பேன் - என்பது பொருள்.

(3) என்னை மாத்திரம் அடி, அப்புறம் என்ன செய்துவிடுகின்றேன் பார் - என்பது பொருள்.

(4) உன்னை வேண்டிக்கொள்கிறேன்,இப்பூசலை நிறுத்திவிடு - எனமுடியும்.

(5) காஸ்ஸியோவைக் கலகக்காரனாக்கி ஊரைக் கூட்டிவைத்து, அதன் பொருட்டு ஒத்தெல்லோ அவனைத் தண்டிக்கும்படி செய்யவேண்டுமென்பது இயாகோவின் கருத்தாதலால், காஸ்ஸியோமான்டானோவுடன் சண்டை செய்கின்ற சமயம்பார்த்து, ராடரிகோ வெளியேசென்று கலகம் கலகம் என்று கூக்குரலிடும்படி செய்கின்றான்.

(6) நீங்கள் காவல் புரிகின்ற விதம் இது மிக நன்றாக இருக்கின்றது - என்று பரிகசம் செய்கின்றான்.

(7) ஊரில் கலகம் நடக்குங்கால் சனங்களை எழுப்புவதற்காக அடிக்கும் மணியொன்று அக்காலத்தில் உண்டு. இது, பண்டைக்காலத்துத் தமிழ்நாட்டிலிருந்தஆராய்ச்சி மணி போன்றது.

(8) பேய்களே ஹோ! என்பது, 'அடே சனியனே, இப்படியாய்விட்டதே' என்பது போன்றவோர் வழக்கு.

(9) நீ இவ்வாறு செய்வதால் உன் கௌரவமெல்லாம் இழந்து இனி எக்காலத்திலும் வெட்கமே மூளவேண்டியவனாவாய் - என்பது பொருள்.

(10) உங்கள் உயிரின் மேல் உங்களுக்கு ஆசையுண்டானால், இக்கலகத்தை நிறுத்துங்கள்; இல்லையானால் உங்கள் உயிரை வாங்கிவிடுவேன் - என்பது பொருள்.

(11) நீங்கள் இருக்கின்ற இடம் எதுவென்பதை புணரவில்லையா; உங்கள் கடமை இன்னதென்பதை உணரவில்லையா; அனைத்தையுமா மறந்தீர்கள் - என்பது பொருள்.

(12) உங்களோடு இப்பொழுது பேசுகிறவர் நம் தலைவர் ஒத்தெல்லோ வென்பதையும் கருதாமல் இன்னும் சண்டை செய்துகொண்டிருக்கின்றீர்களே - என்பது பொருள்.

(13) துருக்கர் நம்மை அழித்துவிடவேண்டினர், கடவுள் அவ்வேண்டுகோளை நிறைவேற்றிவைக்க மறுத்து அவர்தம் கப்பற்படைகளைப் புயலினால் சிதைத்துவிட்டாரானாலும், நீங்களே இப்பொழுது ஒருவரையொருவர் கொன்றுகொண்டு, அத்துருக்கர் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக இப்படிச் சண்டைசெய்கின்றீர்களா என்ன—என்பது பொருள்.

(14) கிறிஸ்தவரென்னும் மானம் போகாதபடி, நாகரிகமற்ற இச்சண்டையை உடனே நிறுத்துங்கள் - என்பது பொருள்.

(15) பூசலை நிறுத்துங்கள், என்று ஒத்தெல்லோ சொல்லியுங் கேட்காமல் பின்னும் சண்டையிலே முனைந்து நின்ற காஸ்ஸியோவையும் மான்டானோவையும் நோக்

இயா:—நிறுத்துங்கள், ஹோ! அடுத்த அதிகாரியே—ஐயா - மான்டானோ - பெருமக்களே - இடத்தின், கடமையின், உணர்வை யெல்லாம் மறந்தீர்களோ?[11] நிறுத்துங்கள்! தலைவர் உங்களுக்குச் சொல்கின்றார்[12]. நிறுத்துங்கள், வெட்கமில்லையா!

ஒத்:—என்ன, எப்படி யெப்படி இப்பொழுது, ஹோ! எங்கிருந்து எழுகின்றது, இது? நாம் துருக்கர்களாக மாறி, தெய்வங்கள் அவர்களுக்கு மறுத்த அதனை நாம் நமக்கே செய்துகொள்கின்றோமா?[13] கிறிஸ்தவ நாணத்திற்காக இவ்வனாகரிகப் பூசலை அப்பால் வையுங்கள்[14]. தன்னுடைய சீற்றத்திற்காகக் கீறுதற்கு அடுத்து இனி அடிபெயர்ப்பவன், தன்உயிரை அற்பமாகக் கருதிக்கொண்டவனாவான்; அன்னவன் அசைந்தவுடன் சாகின்றான்[15]. பயங்கரமான அம் மணியை ஒலி அடக்குங்கள். [16]! இத் தீவினை அதன் அமைதியினின்று அச்சுறுத்துகின்றது அது [17]— ஐயன்மார்களே யாது நிகழ்ந்தது?...துன்பத்தால் மாண்டனையென்னத் தோன்றும் உண்மை இயாகோ, சொல்; யார் இதனைத் துவக்கினர்?

இயா:— நானறியேன்— இங்நிமிடம்வரை,[18] இப்பொழுதுங்கூட நண்பர்கள்; அமைதியிலும் உறவிலும் புதுமணமகளும் மணாளனும் போன்றனர்; அப்புறம்: இப்பொழுதுதான்— ஏதோ கிரகம் ஒன்று மனிதர் மதியைச் சிதைத்ததென்ன [19] வாள்கள் வெளியாகி, இரத்தத் திகலுடன் ஒருவர் மார்பில் ஒருவர் குத்திப்பாய்வது [20]. கடுகடுத்த இப்பூசலுக்காரம்ப மொன்றும் என்னால் பேச இயலவில்லை[21]. இதனில் ஒரு பங்கிற்கு என்னைக் கொணர்ந்த இக் கால்களைப் புகழுடைய போரினில் நான் முன்னரே இழந்திருத்த லாகாதா![22]

ஒத்தே:—இப்படி நீ மறந்தது, மைக்கீல், எப்படி நேர்ந்தது. [23]

காஸ்:—வேண்டிக்கொள்கின்றேன், என்னை மன்னிக்கவேண்டும், என்னால் பேச இயலவில்லை.

ஒத்:—தக்கோய் மான்டானோ, நாகரிகமாக இருத்தல் நின் வழக்கமாயிற்றே; நின் இளமையின் கம்பீரத்தையும் சாந்தத்தையும் உலகம் குறிக்கொண்டிருக்கின்றது[24]; அறிவின் மிக்க மதிப்பினது வாய்களில் நின் பெயர் பெரியது[25]. நின் கீர்த்தியை இங்ஙனம் அவிழ்த்து, உனது உயரிய நன்மதிப்பை, இராப்பூசற்காரன் என்னும் பெயரிற்காகச் செலவழிக்கும்படி, நேர்ந்தது என்ன[26]? அதற்குப் பதிற்சொல் எனக்கு.

இச் சொன்னது இது. தன் கோபத்தைச் செலுத்துவதற்காக உங்கள் இருவரில் இனி யார் முதலில் அசைகின்றீரோ அவரை அப்பொழுதே நான் வெட்டிவிடுவேன் - என்பது பொருள்.

சீற்றத்திற்காகக் கீறுவது - தன் கோபம்பற்றி எதிரியின் உடலைத் தன் கத்தியால் கீறுவது. அல்லது - உண்பதற்காக, சமைத்துவைத்த இறைச்சியைத் தாமே துண்டு துண்டாக ஆங்கிலேயர் கீறி எடுத்துக்கொள்கின்ற வழக்கத்தையும் இது குறிக்கலாம். அப்படியாயின், 'தன்னுடைய கோபத்திற்கு உணவூட்டி வளர்க்க முயல்வது'' என்று அச்சொற்றொடர் பொருள்படும். இவ்விருபொருள்களும் பொருந்தும்.

தன் உயிரை அற்பமாகக் கருதிக்கொண்டவனாவான்-தன் உயிர் காப்பாற்றிக்கொள்வதற்கு உரியதென்னும் மதிப்பின்றி அதனை எளிதில் இழக்கநினைத்தவனாவான்- என்பது பொருள்.

(16) ஊரை எழுப்பும்படி, ராடரிகோ அடித்துக்கொண்டிருக்கின்ற மணியோசையை நிறுத்தும்படி கட்டளை யிடுகின்றான்.

(17) இத்தீவிலுள்ளார், இம்மணியொலியைக் கேட்டு அச்சங்கொண்டு அமைதியிழந்தவ ராகின்றார் - என்பது பொருள்.

(18) இக்கலகத்தின் காரணம் தான் ஒன்றும் அறியாதான்போல் இயாகோ நடிக்கின்றான். இங்நிமிடம் வரையில் காஸ்ஸியோவும் மான்டானோவும் அன்புடைய நட்பின் உறவு பூண்டு அளவளாவி யிருந்தனர் - என்பது பொருள்.

(19) இது, அக்காலத்தில் மேனாட்டிலும் ஜோதிடத்தில் நம்பிக்கையிருந்ததென்பதைத் தெரிவிக்கும். சந்திரன் மனிதருக்குப் பைத்தியம் உண்டாக்கும் என்னும் நம்பிக்கை இந்தியாவைப்போல் மேனாட்டிலும் உண்டு. அப்படி ஏதோ கிரகத்தின் தோஷத்தினால் இவ்விருவருக்கும் பித்தம் மேலாகி இக்கலகம் நேர்ந்திருக்க வேண்டுமே யொழிய வேறு எக்காரணமும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை- என்பது பொருள்.

(20) இரத்தத்து இகலுடன்-இரத்தம்பெருகப் போர் புரிய வேண்டும் என்னும் ஒரு பகையுடன்.

குத்திப்பாய்வது இப்பொழுதுதான் நேர்ந்தது-என்று முடித்துக்கொள்க.

(21) எக்காரணத்தினால் இப்பூசல் துவக்கியதென்று என்னாற் சொல்ல இயலவில்லை - என்பது பொருள்.

(22) முன்னரே நான் யாதானும் ஒரு போரில் என்னுடைய கால்களை இழந்திருப்பேனாயின் இங்கு வந்து, இப்பூசலில் சம்பந்தப்படாம லிருப்பேனன்றோ-என்று கூறுகின்றான்.

(23) 'மைக்கீல்'என்று காஸ்ஸியோவை அவன் கிறிஸ்தவப் பெயரினால் ஒத்தெல்லோ அருமையுற அழைப்பது இதுதான் கடைமுறை. மறந்தது - ஒழுக்கம்மறந்து இப்பூசல் செய்தது.

(24) நீ இளவயதினனாயினும், அமைதியும் கௌரவமும் வாய்ந்த நாகரிகமுடையவன் என்பதை உலகம் அறியும் - என்பது பொருள்.

(25) உன்னுடைய இயற்கையை மதிக்கப்புக்க நல்லறிவாளிகள் அனைவரும், உன் பேரை நன்கு பாராட்டுகின்றனர் - என்பது பொருள்.

(26) உன் கீர்த்தியாகிய பணப்பையை இப்படி அவிழ்த்து, நீ பெற்றிருக்கின்ற நன்மதிப்பென்னும் செல்வத்தை எடுத்துச் செலவுசெய்து, இரவில் கலகம் விளைவித்துத் திரிபவன் என்ற இந்த இழிவான பெயரை வாங்கிக்கொள்ள நீ நேரும்படி புகுந்த காரணம் என்ன, சொல்- என்பது பொருள்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கெட் I.D.L. 61, மேடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
கோரோஜனை மாத்திரை
சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

கலித்தொகை

மருதக்கலி 1.

[பரத்தையர்பால் இன்புற்றுவந்த தலைவனை நோக்கித் தலைவி அவன் குணமிலாச் செய்கையைக் காட்டும்முகத்தால் ஊடல்தீர்ந்ததைக் கூறுவது இச்செய்யுள்]

வீங்குநீ ரவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட
ஞாங்கர் மலர்சூழ்தந் தூர்புகுந்த வரிவண்
டோங்குய ரெழில்யானைக் கனைகடாங் கமழ்நாற்ற
மாங்கவை விருந்தாற்றப் பகலல்கிக் கங்குலான்

வீங்கிறை வடுக்கொள வீழுநர்ப் புணர்ந்தவர்
தேங்கமழ் கதுப்பினு ளரும்பவிழ் நறுமுல்லை
பாய்ந்தூதிப் படர்தீர்ந்து பண்டுதா மரீஇய
பூம்பொய்கை மறந்துள்ளாப் புனலணி நல்லூர

அணைமென்றோள்யாம்வாடவமர்துணைப்புணர்ந்துநீ
மணமனையா யெனவந்த மல்லலின் மாண்பன்றோ
பொதுக்கொண்டகவ்வையுட்பூவணிப்பொலிந்தநின்
வதுவையங் கமழ்நாற்றம் வைகறைப் பெற்றதை

கனலுநோய்த் தலையுநீ கனங்குழை யவரொடு
புனலுளா யெனவந்த பூசலிற் பெரிதன்றோ
தார்கொண்டா டலைக்கோதை தடுமாறிப் பூண்டநின்
ஈரணி சிதையாதெம் மில்வந்து நின்றதை

தணந்ததன் றலையுநீ தளரிய லவரொடு
துணங்கையா யெனவந்த கவ்வையிற் கடப்பன்றோ
வொளிபூத்த நுதலாரோ டோரணிப் பொலிந்தநின்
களிதட்ப வந்தவிக் கவின்காண வியைந்ததை

எனவாங்கு

அளிபெற்றே மெம்மைநீ யருளினை விளியாது
வேட்டோர் திறத்து விரும்பியநின் பாகனு
நீட்டித்தா யென்று கடாஅங் கடுந்திண்டேர்
பூட்டு விடாஅ நிறுத்து.

தரவு

(வரி 1-8):—வீங்குநீர் - பெருகுகின்ற நீரில், அவிழ் நீலம் - மலர்ந்த கருங்குவளை மலர்களை, பகர்பவர் - விற்பவர், வயல் கொண்ட - வயலிடத்தே கொண்டனவாகிய, ஞாங்கர் மலர்-(தம் தலையாகிய) மேல் இடத்தேயுள்ளமலர்களை, சூழ்தந்து - சூழ்ந்துகொண்டு, ஊர் புகுந்த-ஊரிலே நுழைந்த, வரி வண்டு - பாட்டினையுடைய வண்டுகளுக்கு, ஓங்கு-உத்தம இலக்கணங்கள் மிகுந்த, உயர் எழில்யானை - உயர்ந்த அழகினையுடைய யானையினுடைய, கனை கடாம் - மிக்க மதநீர், கமழ் நாற்றம் ஆங்கு - வீசுகின்றவாசனையையுடையஇடத்தில்உள்ள,அவை-வண்டுகள், விருந்துஆற்ற - விருந்து செய்ய, பகல் அல்கி - (அப்பூவொடு வந்த வண்டுகள்) பகற்பொழுதெல்லாம் தங்கி, கங்குலான்-இரவிலே, வீங்கு-பருத்த, இறை-முன்கையிலிருந்த தொடியாலே, வடுகொள-தம்தலைவர் தோள்கள் வடுவைக்கொள்ளும்படியாக, வீழுநர் புணர்ந்தவர் - தாம் விரும்பின தலைவரைப் புணர்ந்த மகளிருடைய, தேம் கமழ் கதுப்பினுள்-நறுமணம் வீசும் கூந்தலில், அரும்பு அவிழ் - அரும்புகள் அவிழ்கின்ற, நறுமுல்லை - வாசனை பொருந்திய முல்லை மலரில், பாய்ந்து - சென்று, ஊதி - அனுபவித்து, படர் தீர்ந்து - (வேறு) நினைப்பொழிந்து, பண்டு தாம் மரீஇய - முன்பு தாம் பொருந்திய, பூம்பொய்கை மறந்து - அழகிய பொய்கையை மறந்து, உள்ளா - அதனை ஒரு காலத்தும் நினையாத, புனல் அணி - நீரினால்அழகுபெற்ற, நல் ஊர - நல்ல ஊருக்குத் தலைவனே,

தாழிசை

(வரி 9 - 12):—பொது கொண்ட - சிறப்பில்லாமையைக்கொண்ட, கவ்வையுள் - ஆரவாரத்திலே, பூ அணி பொலிந்த - பூவினாலாகிய அலங்காரத்தால் விளங்கிய, நின் வதுவை - நின் கலியாணத்தில் உண்டான, அம் கமழ் நாற்றம் - அழகிய வீசுகின்ற மணத்தினை, வைகறை பெற்றதை - விடியற்காலத்தில் (யாம்) பெற்றது, அணை மென் தோள்-அணைபோலும் மெல்லிய தோளையுடைய, யாம் வாட - யாம் வாட, நீ அமர் துணை புணர்ந்து - நீ விரும்பிய மகளிரைக் கூடி, மண மனையாய் என - கலியாண வீட்டிடத்தாய் என்று பிறர் சொல்ல, வந்த - உண்டான, மல்லலின் - (அலரின்) மிகுதியைக்காட்டிலும், மாண்பு அன்றோ - மாட்சிமை யுடையதொன் றன்றோ?

பெற்றது மாண்பன்றோ என முடிக்க.

(வரி 13 - 16):—தார் கொண்டாள் - உனது மார்பின் மாலையை வாங்கிக்கொண்டவளுடைய, தலை கோதை - தலைமாலையை, தடுமாறி பூண்ட - மனம் தடுமாறி அணிந்துகொண்ட, நின் ஈர்அணி சிதையாது - நினது இரண்டு அணியும் கெடாமல், எம் இல் வந்து நின்றதை - எமது வீட்டிற்கு வந்து நின்றது, கனலும் நோய் தலையும் - எரிகின்ற காமநோய்க்கு மேலும், கனம் குழையவரொடு - கனத்த காதணியையுடைய பரத்தையருடனே, புனல் உளாய் என - நீர்விளையாட்டில் அமர்ந்துள்ளாய் என்று, வந்த - உண்டான, பூசலின்-அலரைக்காட்டிலும், பெரிது அன்றோ - பெரியது ஒன்று அன்றோ?

தலைவன் தனக்குரிய ஆண் அணியோடும் பரத்தையின் அணியோடும் வந்துநின்றான் ஆதலின் தலைவி ஈரணி என்றாள்.

(வரி 17 - 20):—ஒளிபூத்த - ஒளிபொருந்திய, நுதலாரோடு - நெற்றியையுடையாரோடு, ஓர் அணி பொலிந்த- (கூடுதலால் உண்டான அணியின் வடு இருத்தலின் அவர்க்கும் உனக்கும்) ஓரணியாகப் பொலிவுபெற்ற,நின் களி தட்ப வந்த - உனது செருக்கு (பிறர்பால் உன்னைப் போகவிடாமல்) தடுக்க வந்த, இக் கவின் காண இயைந்ததை - இந்த அழகை யாம் காணும்படி நேர்ந்தது,தணந்ததன் தலையும் - எம்மைப் பிரிந்ததற்கு மேலும், நீ தளரியலவரொடு- (நீ முலைகளின் பாரத்தால்)தளர்ந்த இயலையுடைய பரத்தையரோடு, துணங்கையாய் என - துணங்கைக்கூத்து ஆடுகின்றாய் என, வந்த-உண்டான, கவ்வையின் - அலரைப் பார்க்கிலும், கடப்பு அன்றோ - மிக்கதொன் றன்றோ?

தனிச்சொல்

என - இவ்விதம், (ஆங்கு - அசை.)

சுரிதகம்

(வரி 22 - 25):—அளிபெற்றேம் - நினதுகருணையைப் பெற்றோம், எம்மை நீ அருளினை - எம்மை நீயும் அருள் செய்தாய், விளியாது-கெடாது, வேட்டோர்திறத்து - நீ

குறிப்பு:—பாலைக்கலி, கலாநிலயம் 6-வது வால்யூமில் (1933) உரையுடன் எழுதப்பெற்றிருக்கின்றது.

விரும்பியோரிடத்து, விரும்பிய நின்பாகனும் - நீ செல்லுதலை விரும்பிய உன்பாகனும், நீட்டித்தாய் என்று - தங்கி விட்டாய் என்று, கடாஅம் - செலுத்துகின்ற, கடுமதிண் தேர் - கடிய திண்ணிய தேரை, பூட்டுவிடாஅ நிறுத்து - அவிழ்த்து விடாதவாறு நிறுத்து.

பாகனும் - உம்மை எச்சம்.

மருதக்கலி 2

பரத்தையரிடமிருந்து தலைவன் திரும்பி வந்ததும் அவனோடு தான் கூடாது ஊடல்கொள்ளப்போவதாகச்சொல்லிக்கொண்டிருந்த தலைவி அவன் வந்ததும் ஊடாதுகூடினள். அதுகண்டு நகைத்த தோழிக்கு அவள் கூறியதைக் கூறுவது இச்செய்யுள்.

கார்முற்றி யிணரூழ்த்த கமழ்தோட்ட மலர்வேய்ந்து
சீர்முற்றிப் புலவர்வாய்ச் சிறப்பெய்தி யிருநிலந்
தார்முற்றி யதுபோலத் தகைபூத்த வையைதன்
னீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லா னேராதார்
போர்முற்றொன் றறியாத புரிசைசூழ் புனலூரன்

நலத்தகை யெழிலுண்க ணல்லார்தங் கோதையா
லலைத்தபுண் வடுக்காட்டி யன்பின்றி வரினெல்லா
புலப்பேன்யா னென்பேன் மனந்நிலையேயவற்காணிற்
கலப்பே னென்னுமிக் கையறு நெஞ்சே

கோடெழி லகலல்குற் கொடியன்னார் முலைமூழ்கிப்
பாடழி சாந்தினன் பண்பின்றி வரினெல்லா
வூடுவே னென்பேன்ம னந்நிலையே யவற்காணிற்
கூடுவே னென்னுமிக் கொள்கையி னெஞ்சே

இனிப்புணர்ந்த வெழினல்லா ரிலங்கெயி றுரூஅலி
னனிச்சிவந்த வடுக்காட்டி நாணின்றி வரினெல்லா
துனிப்பேன்யா னென்பேன்ம னந்நிலையே யவற்காணிற்
றனித்தே தாழுமித் தனியி னெஞ்சே

எனவாங்கு

பிறைபுரை யேர்நுதா லுமெண்ணி யவையெல்லாந்
துறைபோத லொல்லுமோ தூவாகா தாங்கே
யறைபோகு நெஞ்சுடை யார்க்கு.

தரவு

(வரி 1 - 5):—கார்முற்றி - கார்காலம் முதிர்தலால், இணர் ஊழ்த்த - கொத்துக்கள் அரும்பிய, கமழ்தோட்ட - கமழ்கின்ற இதழ்களையுடைய, மலர் வேய்ந்து - மலர்களைச் சூடி, சீர்முற்றி - சிறப்பு முதிர்ந்து, புலவர் வாய் சிறப்பு எய்தி - புலர் வாயிலிருந்து வரும் பாடல்களைப் பெற்று, இருநிலம் - பெரிய பூமி, தார் முற்றியது போல - மாலையைத் தரித்ததுபோல நின்ற, தகை பூத்த - அழகு மிக்க, வையைதன் நீர் - வைகையினது நீர், முற்றி - சூழ்ந்து, மதில் பொரூஉம் - மதிலைத்தாக்கும், பகை அல்லால் - பகையே அல்லாமல், நேராதார் - பகைவர், போர் முற்று ஒன்று அறியாத - போரால் வளைத்தலைச் சிறிதும் அறியாத, புரிசை சூழ் - மதில் சூழ்ந்த, புனல் ஊரன் - நீரையுடைய மதுரையையுடையவன்.

தாழிசை

(வரி 6 - 9):—நலத்தகை - நன்மையால் தகுதிபெற்ற, எழில் உண் கண் - அழகினையுடைய மையுண்ட கண்களைப் பெற்ற, நல்லார்தம் கோதையால் - பரத்தையர் தமது மாலையால், அலைத்த - அடித்த, புண் - புண்ணின், வடு - வடுக்களை, காட்டி - காட்டிக்கொண்டு, அன்புஇன்றிவரின் - அன்பில்லாமல் வந்தால், எல்லா - தோழியே, புலப்பேன் யான் என்பேன் - யான் ஊடல் கொள்வேன் என்றிருப்பேன், மன் - அதனால் என்ன பயன்? அந்நிலையே - அவ்வெண்ணம் இருக்கும்பொழுதே, அவன் காணின் - தலைவனைக் கண்டால், இக் கையறு நெஞ்சு - இந்தச் செயலற்ற நெஞ்சு, கலப்பேன் என்னும் - யான் கூடுவேன் என்னும்.

நெஞ்சே, ஏ - யான் என் செய்வேன் !

(வரி 10 - 13):—கோடு எழில் அகல் அல்குல் - பக்கங்கள் (உயர்ந்த) அழகினையுடைய அகன்ற அல்குலினையுடைய, கொடியன்னார் - கொடிபோன்ற பரத்தையர், முலைமூழ்கி - முலையிலே மூழ்கி, பாடு அழி சாந்தினன் - பெருமை கெட்ட சாந்தையுடைய தலைவன், பண்பு இன்றி - நன்மக்கள் குணம் இன்றி, வரின் - வந்தால், எல்லா - தோழியே, ஊடுவேன் என்பேன் - ஊடல் கொள்வேன் என்றிருப்பேன், மன் - அதனால் என்ன பயன், அந்நிலையே - அவ்வெண்ணம் இருக்கும் பொழுதே, அவன் காணின் - தலைவனைக் காணின், கொள்கை இல் இ நெஞ்சு - யான் கூறியதனைக் கொள்ளுதலில்லாத இந்த நெஞ்சு, கூடுவேன் என்னும் - யான் கூடுவேன் என்னும்.

நெஞ்சே, ஏ - யான் என் செய்வேன் !

(வரி 14 - 17):—இனி புணர்ந்த - இப்பொழுதுதான் கூடிய, எழில் - அழகினையுடைய, நல்லார் - பரத்தையரின், இலங்கு எயிறு - விளக்குகின்ற பற்கள், உரூஅலின் - அழுந்துதலினாலே, நனி சிவந்த வடு காட்டி - மிகவும் சிவந்த வடுக்களைக் காட்டிக்கொண்டு, நாண் இன்றிவரின் - நாணம் இன்றி வருவானாயின்; எல்லா - தோழியே, துனிப்பேன் யான் என்பேன் - ஊடுவேன் யான் என்றிருப்பேன், மன் - அதனால் என்ன பயன், அந்நிலையே - அக்கருத்தோடு யான் இருக்கும் அந்த நிலையிலேயே, அவன் காணின் - தலைவனைக் காணின், இத் தனி இல் நெஞ்சு - இந்தத் தனிமையைத் தனக்கு உரியதாகக் கொள்ளாத நெஞ்சு, தனித்தே தாழும் - என்னை விட்டுத் தானாகவே ஓடி அவனிடத்தே தங்கும்.

நெஞ்சே, ஏ - யான் என்செய்வேன் !

தனிச்சொல்

(வரி - 18) என - என்று

ஆங்கு - அசை

சுரிதகம்

(வரி 19 - 21) பிறைபுரை - பிறையை ஒத்த, ஏர் நுதால் - அழகிய நெற்றியையுடைய தோழியே, தூஆகாது - தமக்குப் பக்கபலமாகாது, அறைபோகும் - கீழே அறுத்துக்கொண்டுபோகும், நெஞ்சு உடையார்க்கு - மனத்தையுடையவர்க்கு, எண்ணியவை எல்லாம் - தாம் நினைத்தவற்றையெல்லாம், துறைபோதல் - முற்ற முடித்தல், ஒல்லுமோ - கூடுமோ? (கூடாதே)

ஆங்கு - அசை

அறைபோதலாவது தன் பக்கத்தார்க்குத் துணையாகாது வஞ்சகஞ் செய்துபோய் எதிர்பக்கத்தாரோடு சேர்ந்துகொள்ளுதல்.

பழமுதிர்சோலை

நல்லார்கட் பட்ட திரு

தவம் சில செய்ததில்லை இவ்வுலகம் என்று சொல்லத் துணிவார் யார்! அஃது உடைமையாற்றான் நான்முகன், பாவலர் வயிற்றிற் பசியை வைத்தான். அப்பசியோ பிடித்துந்தப் புலமைசான்றவர் இரவலர்களாகிப் புரவலர்முன்னர்ச் சென்றுநின்று பாடலாகின்றனர். அப்பாடல்களோ அழகொடு அருமையும் நனி வாய்ந்தன. அந்நாள் அவர் அங்குப் பாடியவைகளை நாம் என்றும் எங்குங் கேட்டு இன்புறுவோராகின்றோம். அப் பசியினாலன்றோ இப்பாடல்கள் பிறந்தன. அன்னவைகளைப் பாடினோர்க்கு அப்புரவலர் பரிசில் பல தந்தனர். ஆயினும், பரிசிலைக் கொடுத்துவிட்டால் பெற்றுக்கொண்ட பாவலர் தம் அவையைவிட்டு அகன்றுவிடுவாராதலின், அது நேராவண்ணம் புரவலர்கள் பரிசில் கொடாமல் தாழ்ப்பதும் உண்டு. இன்னபடி பரிசில் தாழ்த்தலின் நோக்கத்தின் உண்மையை உணராத புலவர்கள், நெருக்குகின்ற தம் வறுமையை நீக்குமாறு காணாமல், மிக வருந்துவார். நேர்முகமாக ஈ யென்று இரத்தலும் இழிவுடைத்து; கேளாமற் சென்றுவிட வொட்டாமல் அவர்தம் நல்குரவும் தடுக்கின்றது. இதற்கிடையில், பொதுமை நோக்கிப் பேசுவார் போன்று சில குறிப்புக்களால் பரிசில்கடாநிலையினராகி அவர் ஒன்றிரண்டு பாடல் பகர்வாராவார்.

இன்னவாறு பரிசில் நீட்டித்தான், சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமா வளவன்; அன்னவனைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடுகின்றார். நண்பர்கள் வம்மின், நாமுங் கேட்போம். வளவன் பின்னர் இவ்விரவலனுக்குப் பரிசில் தந்தானாகுக, தாராதானாகுக: நீவிர் நுந்தம் செவிகளன்றி யாதொன்றுந் தருதல் வேண்டா. கேண்மின் :—

வளிநடந் தன்ன வாஅய்ச்செ லிவுளியொடு
கொடிநுடங்கு மிசைய தேரின ரெனாஅக்
கடற்கண் டன்ன வெண்படைத் தானையொடு
மலைமாறு மலைக்குங் களிற்றின ரெனாஅ
உருமுரற் றன்ன வுட்குவரு முரசமொடு
செருமேம் படூஉம் வென்றிய ரெனாஅ
மண்கெழு தானை யொண்பூண் வேந்தர்
வெண்குடைச் செல்வம் வியத்தலோ விலமே
எம்மால் வியக்கப் படூஉ மோரே
இடுமுட் படப்பை மறிமேய்ந் தொழிந்த
குறுநறு முஞ்ஞைக் கொழுங்கட் குற்றடகு
புன்புல வரகின் சொன்றியொடு பெறூஉஞ்
சீறூர் மன்ன ராயினு மெம்வயிற்
பாடறிந் தொழுகும் பண்பி னோரே
மிகப்பே ரெவ்வ முறினு மெனைத்து
முணர்ச்சி யில்லோ ருடைமை யுள்ளே
நல்லறி வுடையோர் நல்குர
வுள்ளுதும் பெருமயா முவந்துநனி பெரிதே.

[காற்று அடித்ததென்னும்படி தாவிச் செல்லும் கதியையுடைய குதிரையோடு கொடி அசையும் உச்சியையுடைய தேரினை உடையவர் எனவும், கடலைக் கண்டதென்னும்படி ஒளியுடைய படைக்கலத்தை ஏந்திய சேனையுடனே மலையோடு மாறுபட்டுப் போர் செய்யும் யானையை உடையவர் எனவும், இடி முழங்கியதென்னும்படி அச்சத்தைத் தருகின்ற முரசத்தோடு போரில் மேம்படும் வெற்றியை உடையவர் எனவும், கருதி, பூமியில் நிலைத்த சேனையையும் ஒளிபொருந்திய ஆபரணங்களையும்உடைய அரசர்களின் வெண்கொற்றக் குடையின் கீழ் அமைந்த செல்வத்தையாம் ஒன்றாக மதிக்கின்றோமில்லை. எம்மால் மதிக்கப்படுகின்றவர் யார் எனின்—முள்வேலியிட்ட தோட்டத்தில் ஆடுகள் மேய்ந்து எஞ்சி நின்ற குறிய நறிய முஞ்ஞைச்செடியின் செழிப்பான கணுக்களிற் கிளைத்த குறிய இலையை, புல்லிய நிலத்தில் விளைந்த வரகினது சோற்றுடனே உண்கின்ற சிறிய ஊரையுடைய வேந்தராயினும் எம்மிடத்துச் செய்யும் முறைமையை அறிந்து நடக்கும் குணத்தினை யுடையோர்தாம் எம்மால் மதிக்கப்படுகின்றார்காண். யாம் மிகப்பெரிய துன்பம் அடைந்தாலும் சிறிதும் அறிவில்லாதோருடைய செல்வம் பயன்படாமையால் அதனை நினையோம்; நல்ல அறிவுடையோரது வறுமை பயன்படுதலால் அதனை, பெருமானே, யாம் உவந்து மிகப் பெரிதும் நினைப்போம்.]

ஆம்; "நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே கல்லார்கட் பட்ட திரு" என்றனர் வள்ளுவர். கல்லார்கண் பட்ட திரு அவர்தமக்கே இன்னாததாவதைப் பேசினார் அவர். நல்லார்கண் பட்ட வறுமை பிறர்க்கு இனியது மாகவல்லதைக் கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் இங்குக் கூறுகின்றார். பரிசில் நீட்டித்த சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திரு மாவளவன் இதனைக் கேட்டு, தன் செல்வமுடைமைக்கு நாணினனோ, மற்று, பரிசில் நீட்டித்த தன் நோக்கத்தினை யறியாமற் புலவர் அங்ஙனம் பாடியதுபற்றி இளநகையரும்பி அவரை இனிது நோக்கி, நல்லார்கட் பட்ட திருவின் நலத்தினைக் காட்டி அங்ஙனே அந்தப் புலவரை மகிழ்வித்தானோ எங்ஙனம் அறிவோம். எனினும், மதுரைக் குமரனார் இல்லின்கண்,

நின்னயந் துறைநர்க்கு நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பின் கிளைமுத லோர்க்குங்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கு
மின்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயு
மெல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே
பழந் தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமண னல்கிய வளனே

என்னப் பெருஞ் சித்திரனார் மனையின்கண் நிகழ்ந்த அந் நிகரிலாத் தூய்மை வாய்ந்த மொழிகளால், கற்பின் மிக்க தன் மனையாட்டிக்கு உரைக்குங் கூறலும் உற்றுக் கேட்போமெனின் நம் செவியகம் சேராமலொழியாது. அறிவினோர் பெறுவதெல்லாம் பெற்ற பொருள் பெற்றவாங்கே பிறர்கை மாறுவதற்கேயாமன்றோ.

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

ஆயுளெல்லாம் சிறை:—1900-ம் ஆண்டு முதல் திருட்டுத் தொழிலில் ஈடுபட்டு ஏழு வழக்குக்களில் 31 வருஷம் சிறைவாச தண்டனை யடைந்து அரசர் பெருமான் வெள்ளிவிழாவை யொட்டிச் சென்ற மே மாதம் விடுதலையடைந்த ஒருவன் உடனே அகமத் ஆலம் என்ற மற்றொரு முஸ்லிம் சட்டை யிலிருந்து ரூ. 3-8-3 அடங்கிய பணப்பையைத் திருடிய குற்றத்திற்காக மூன்றரை வருஷம் சிறைவாச தண்டனை அடைந்திருக்கிறான்.

* * *

நெடு வாழ்வு:—தென் ஆப்பிரிக்காவிலுள்ள டர்பன் நகரத்துப் பழங்குடியான கரம்சந்து என்ற இந்தியர் சென்ற மாதத்தில் 108-வது வயதில் காலஞ் சென்றார்.

* * *

உலகிலேயே பெரிய பெண்:—பல்கேரியா நாட்டில் சோப் ராணி கிராமத்தில் வசிக்கும் 15 வயதுள்ள ஆஞ்சிலோவாஎன்ற பெண் உலகத்திலேயே பெரிய பெண்ணும். அவள் இருபத்து மூன்று கல் நிறை யிருக்கிறாளாம்.

* * *

109 குட்டிகள் போட்ட பன்றி:— கார்ன்வாலில் ஒரு பன்றி ஆறு முறை குட்டி போட்டதாம். இந்த ஆறு தடவைகளில் அது 109 குட்டிகள்போட்டிருப்பதாகக் கூறுகிறார்கள்.

* * *

குடியில் பெருத்த வீரர்:—பால்டிமோர் வாசியான எமில் செல்லா என்ற மனிதர் 17 செகண்டில் அரைக் காலன் பீர்ச்சாராயத்தைக் குடித்துவிட்டு உலகத்தில் பீர் அருந்துவதில் பெரிய வீரர் என்று பேர் பெற்றுவிட்டார்.

* * *

Indo-Commercial Bank, Ltd.,
Mayavaram.
Capital, Reserves, etc., as at 30th August 1935 : Rs. 10,62,245.
BRANCHES :—
Madras Office :—
107, Armenian Street.
Bazaar Branch :—
260, China Bazaar Road.
Madura, Karaikudi, Virudhunagar, Tuticorin, Kumbakonam, Tiruvarur, Erode, Vizianagaram, Pudukottah, Tinnevelly, Salem and Trichinopoly.
SUB OFFICES:—
Shiyali, Chidambaram, Conjeevaram and Tanjore.
All kinds of Banking Business undertaken on terms which may be ascertained on application.
S. N. N. SANKARALINGA IYER,
Managing Director,
107, Armenian Street, Madras.

பறவைக் கப்பல்:-பாட்டியாலா மகாராஜாவுக்குச் சுமார் பதினாயிரம் பொன் செலவில் ஒரு பறவைக் கப்பல் லண்டனில் கட்டுகிறார்கள். அதில் சகல வசதிகளும் அமைந்திருக்கும்.

* * *

கப்பல் வடிவத்தில் பங்களா:—பாட்டியலா மன்னர் இமயமலைமீது ஒரு லண்டன் சிற்பியைக் கொண்டு முதலில் எட்டு அழகிய பங்களாக்கள் கட்டப் போகிறாராம். இவை கப்பல் வடிவுள்ள ஒரு இடத்தில் அமைந்திருக்குமாம்.

* * *

அணில் வளர்க்கும் பூனை:—அமெரிக்காவில் டெக்ஸாஸ் பகுதியிலுள்ள ஒரு பூனை மூன்று குட்டிகள் போட்டது, அதன் குட்டிகள் இறந்துவிட்டதால் அந்தப் பூனை மூன்று அணில் குட்டிகளை வளர்த்து வருகிறது. பூனைகள் பொதுவாக அணில்களுக்குச் சத்துரு. எலிகளை எவ்வளவு ஆவலுடன் பிடித்துத் தின்னுமோ அவ்வளவு ஆவலுடன் அணில்களையும் பூனைகள் பிடித்துத் தின்னுவதுண்டு. ஆனால் இந்த மூன்று அணில் குட்டிகளையும் இந்தப்பூனை அன்புடன் வளர்த்துவருகிறது.

* * *

பெண் நாடு:—லிபியா என்ற நாட்டில் பெண்கள் அரசிகளா யிருக்க ஆண்கள் அடிமைகளா யிருக்கின்றார்களாம். அங்குப் பெண்கள் உணவு உட்கொண்ட பின்னரே ஆண்கள் உணவு உட்கொள்ளுகிறார்களாம். பெண்கள் சாப்பிட்டு முடியும் வரை ஆண்கள் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறார்களாம். பெண் ஒட்டகை மீது சவாரிப்போக, புருஷன் ஒட்டகையின் கயிற்றைப் பிடித்துக்கொண்டு நடந்து போகிறானும். மாதர்கள் விருந்துண்டு ஆடல் பாடல்களில் பொழுதுபோக்க, ஆண்கள் நீர் இறைத்துப் பாத்திரங்களைக் கழுவுகிறார்களாம். லிபியா நாட்டுக்குச் சென்ற டக்லஸ் காம்பெல் இந்த நாட்டு விநோதங்களை ஒருபுஸ்தகத்தில் எழுதியிருக்கிறார்.

* * *

கிராமவாசிகள் திறமை:— பல்கேரியாவில் போட்டோ விட்ஜா என்னும் கிராமத்தில் ஒரு ரயில்வே ஸ்டேஷன் ஏற்படுத்தும்படி அக் கிராமவாசிகள் நெடுங்காலம் கேட்டு வந்தார்கள். ஜனங்கள் விருப்பப்படி அங்குச் சமீபத்தில் ஒரு ஸ்டேஷனை ஏற்படுத்தினார்கள். இந்தக் கிராமத்தில் ஒரு ஸ்டேஷன் ஏற்படுத்தியது அருகிலுள்ள மற்றொரு கிராம வாசிகளுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, அவர்கள் ஒருநாளிரவு அந்த ஸ்டேஷனைத் தகர்த்து எடுத்துக்கொண்டு போய்த் தங்கள் கிராமத்தில் அப்படியே அமைத்துக்கொண்டார்கள். அன்று அதிகாலையில் வந்த ரயில்வண்டி புதிய ஸ்டேஷனில் போய் நின்றது. அதுவே பழைய ஸ்டேஷன் என்று நினைத்து அங்கு வண்டியை நிறுத்தினர்.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்
சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்! “ காம சாஸ்திரம் ” இனும் !!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)